10.01.2025 - வெள்ளிக்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

விலை ரூபா 40

ஆண்டு: 01 இதழ் : 67 குரோதி வருடம் மார்கழி மாதம் 26 ஆம் திகதி - ஹிஜ்ரி 1446 ரஜப் 10 பக்கங்கள் - 12




## இஸ்லாம் அவமதிப்பு: ஞானசார தேரருக்கு 9 மாத சிறை



இஸ்லாம் மதத்தை அவமதித்த குற்றச்சாட்டில் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் 09 மாத சிறைத்தண்டனை விதித்துள்ளது.

02 →

## ரணிலின் கொள்கைகளை அரசாங்கம் பின்பற்றுகிறதா? ஹந்துன்நெத்தி பதில்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைகளை சமகால அரசாங்கம் பின்பற்றுவதாக மக்கள் மத்தியில் போலி பிரசாரங்களை எதிர்க்கட்சிகள் முன்னெடுத்துள்ளன.

எமது அரசாங்கம் அமையப்பெற்று நூறு நாட்களை எட்டியுள்ள சூழலில் எந்தவொரு நபர் மீதும் ஊழல்,

02 →

# ரோஹிங்கியர்களை நாடுகடத்த வேண்டாம்: முல்லைத்தீவில் போராட்டம்!




படம் : அந்தணன், தவசீலன்

செய்தி 02 ஆம் பக்கம்



# 2025-நிதி ஒதுக்கீடுகள்: அரசின் மொத்த செலவு 4,691 பில்லியன் ரூபா

- நிதி திட்டமிடல் அமைச்சுக்கு 484 பில்லியன் ரூபா – ஆகக் கூடிய ஒதுக்கீடு
- சுகாதார அமைச்சுக்கு ரூ.412 பில்,
- பாதுகாப்புக்கு ரூ.382 பில்
- கல்விக்கு ரூ. 206 பில்.
- பொது நிர்வாகம் ரூ. 463 பில்.

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

2025 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் அரசின் செலவு 4691 பில்லியன் ரூபாவாக கணக்கிடப்பட்டுள்ளது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பிரதமர் ஹரிணி அமரசூரியவால் நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி தொடங்கி டிசம்பர் மாதம் 31 ஆம்

02 →

## அரிசி இறக்குமதி கால அவகாசம் இன்றுடன் நிறைவு

(கனுஷியா புஷ்பகுமார்)

அரிசி இறக்குமதிக்காக இறக்குமதியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி காலம் இன்று (10) நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள அரிசி இறக்குமதிக்கு தீர்வாக அரசாங்கம் கடந்த டிசம்பர் மாதம் 4ஆம் திகதி தனியார் துறையினருக்கு அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கியது.



இந்நிலையில், அரிசியை இறக்குமதி செய்ய வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் இன்றுடன் நிறைவடையவுள்ளதால், குறித்த கால அவகாசம்

02 →

## சொந்த நிலம்; சொந்த வீடு: மலையக மக்களுக்காக குரல் எழுப்பிய சிறிதரன்



இந்த அரசாங்கத்திலாவது மலையக மக்களுக்கு சொந்த நிலம் மற்றும் வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டால் வரலாற்றில் சாதனை புரிந்த அரசாக இந்த அரசாங்கம் மாறக்கூடும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (09) வியாழக்கிழமை கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், மலையக மக்களின் அடிப்படை சம்பள பிரச்சினை தொடர்பில் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி எடுக்கும் தீர்மானங்களுக்கு நாம் ஆதரவளிப்போம்.

02 →

## இரு புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஜனாதிபதியினால் நியமனம்



இரண்டு புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் நேற்று (09) காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தனர்.

02 →

## அரச ஊழியர்களுக்கு பட்ஜெட்டில் சம்பள உயர்வு உறுதி

### IMF ஆட்சேபனை தெரிவிக்கவில்லை

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

2025ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு கணிசமான சம்பள உயர்வை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை ரவி கருணாநாயக்க எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே



அவர் இவ்வாறு கூறினார்.

பொதுத்துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதில் சர்வதேச நாணய நிதியத்துக்கு (IMF) எந்தவித ஆட்சேபனையும் இல்லை என உறுதியளித்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க கூறினார்.

25,000 ரூபாவை அதிகரிப்போம் என நாம் கூறவில்லை. எமது தேர்தல் வாக்குறுதியிலும்

02 →

## இலவச சீருடை விநியோகம் புதிய கல்வியாண்டின் முதல் வாரத்தில்!



(முகம்மட் முக்தார்)

நாடளாவிய ரீதியில் உள்ள அரச, அரச உதவி பெறும் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகம் புதிய கல்வியாண்டு ஆரம்பிக்கப்படும் முதலாவது வாரத்தினுள் வழங்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

02 →

## 17 மாத காலப்பகுதியில் 548 ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானங்கள் தாமதம்




(கனுஷியா புஷ்பகுமார்)

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 2023ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி வரையிலான 17 மாத காலப்பகுதியில் 548 ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானங்கள் தாமதமாகியுள்ளதுடன் 3 மணி நேரம் முதல் 59 மணி நேரம் வரை தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்ட சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.

அதன் படி, 2022ஃ2023 நிதியாண்டில் விமான தாமதங்கள் மற்றும் இடையூறுகள் காரணமாக விமான நிறுவனத்திற்கு ஏற்பட்ட மொத்த செலவு 784,000 அமெரிக்க டொலர்கள் என்றும் கணக்காய்வு அறிக்கை கூறுகிறது.

மாற்று விமானங்களை சரியான நேரத்தில்

02 →

## இலங்கையில் HMPV நோயாளிகள் இதுவரை கண்டறியப்படவில்லை

### சுகாதார அமைச்சர் உறுதி

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

இலங்கையில் HMPV நோயாளிகள் எவரும் இதுவரை கண்டறியப்படவில்லை என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

02 →



# ரோஹிங்கியர்களை நாடுகடத்த வேண்டாம்: முல்லைத்தீவில் போராட்டம்!

**அந்தணன்-முல்லைத்தீவு**






முல்லைத்தீவில் தஞ்சமடைந்த ரோஹிங்கிய அகதிகளை நாடுகடத்த வேண்டாம் என வலியுறுத்தியும் இலங்கை சர்வதேச மனித உரிமை சட்டங்களை பாதுகாக்க கோரியும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் நேற்று(9) முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மனிதஉரிமை பாதுகாவலர்கள், கடற்தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் இணைந்து வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினர் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பதாகைகளை தாங்கியவாறு அமைதியான முறையில் கவனயீர்ப்பினை வெளிப்படுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்கள்,

ரோஹிங்கியா அகதிகளை நாடுகடத்த வேண்டாம் என இலங்கை அரசிடம் கோரியுள்ளார்கள்.

இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கத்துவ நாடாகும். எனவே ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைகளுக்கு மதிப்பளிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறே சர்வதேச மனிதாபிமான சட்டங்களை, மனித உரிமைச்சட்டங்களை, சர்வதேச வழக்காற்று சட்டங்கள் ஆகியவற்றுக்கு கட்டுப்படும் கடப்பாட்டையும் கொண்டுள்ளோம்.நாடு கடத்தப்படாமை என்பது இந்த அனைத்து சட்டங்களினதும் மையக்கொள்கையாகும். எனவே மனிதாபிமான விழுமியங்களை நிலைநிறுத்துமாறும்,இந்த அகதிகளின் சொந்த இடத்திற்கு அவர்கள் திருப்பி அனுப்பாதிருக்குமாறும் இலங்கை அரசிற்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்த அகதிகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் இரண்டு வாரங்களுக்கு மேலாக அந்த மாவட்டத்தின் சிவில் நிர்வாக கண்காணிப்பு இன்றி தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இராணுவ மயமாக்கல் சூழலுக்குள் அகதிகளை தங்கவைப்பது சர்வதேச மனிதாபிமான நியமங்களுக்கும் அடிப்படை மனிதாபிமான விழுமியங்களுக்கும் மாறானதாகும்.

எனவே இந்த அகதிகளை மிரிஹானவில் உள்ள அகதிகள் மையத்திற்கு அல்லது வேறொரு பொருத்தமான இடத்திற்கு மாற்றுவதுடன் அப்பிரதேச சிவில் நிர்வாக கண்காணிப்புக்குள் அவர்களை கொண்டுவர வேண்டும்.

இலங்கை என்பது ஒரு அபிவிருத்தி அடைந்து வரும் நாடு எனும் வகையில் இலங்கை சர்வதேச அகதிகளின் புகலிடமாக மாறுவதை நாம் விரும்பவில்லை. எனினும் தற்போதுள்ள அகதிகளை சர்வதேச அகதிகள் சட்டத்திற்கு அமைய நடத்தவேண்டும் என்பதையே அரசாங்கத்திடம் வேண்டுகின்றோம்.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பினை பெறுமாறும் இந்த அகதிகளுக்கு அகதி அந்தஸ்து வழங்கும் தகைமையுடைய நாடுகளிடம் அந்த நாடுகளில் அகதி அந்தஸ்து வழங்குவது குறித்து கலந்துரையாடல் மேற்கொள்ளுமாறும் கோருகின்றோம் என்றும் தெரிவித்தனர்.

மேலும் அவர்களின் அறிக்கையை பிரதமர்,வெளிவிவகார அமைச்சர், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கானவதிவிடப்பிரதிநிதி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியோருக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக தெரிவித்தனர்.

## 2025-நிதி ஒதுக்கீடுகள்:

திகதி வரையிலான காலப்பகுதியில் அரச செலவுகள் குறித்து இதில் கணிப்பிடப்பட்டுள்ளதுடன், மொத்த செலவு 4691 பில்லின்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இம்முறை ஜனாதிபதியின் கீழ் இயங்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சுக்கே அதிக நிதி ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது. இந்த அமைச்சுக்கு 484 மீண்டுவரும் செலவு எனவும் 229 மூலதனச் செலவு எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

2024ஆம் நிதியாண்டுக்கு 3860 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில் 2025ஆம் நிதியாண்டுக்கு 831 பில்லியன் ரூபா அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அமைச்சுகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் இடம்பெற்றுள்ள விபரம் வருமாறு,

**பௌத்த, மத மற்றும் கலாசார விவகார அமைச்சு**
மீண்டுவரும் செலவு - 8.3 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 5.4 பில்லியன் ரூபா

**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சு**
மீண்டுவரும் செலவு - 484 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 229 பில்லியன் ரூபா

**பாதுகாப்பு அமைச்சு**
மீண்டுவரும் செலவு - 382 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 60 பில்லியன் ரூபா

**நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு**
மீண்டுவரும் செலவு - 38 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 16 பில்லியன் ரூபா

**சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சு**
மீண்டுவரும் செலவு - 412 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 95 பில்லியன் ரூபா

**வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு**
மீண்டுவரும் செலவு - 19.4 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 2 பில்லியன் ரூபா

**வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு ,அபிவிருத்தி அமைச்சு**
மீண்டுவரும் செலவு - 2.6 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 397 மில்லியன் ரூபா

**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு**
மீண்டுவரும் செலவு- 52.4 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 421 பில்லியன் ரூபா

**விவசாயம், கால்நடை, நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**
மீண்டுவரும் செலவு- 83 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 124 பில்லியன் ரூபா

**எரிசக்தி அமைச்சு**
மீண்டுவரும் செலவு- 1 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 20 பில்லியன் ரூபா

**நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி அமைச்சு**
மீண்டுவரும் செலவு- 3 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 98 பில்லியன் ரூபா

**கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு**
மீண்டுவரும் செலவு- 24 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 05 பில்லியன் ரூபா

**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
மீண்டுவரும் செலவு- 206 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 65 பில்லியன் ரூபா

**பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
மீண்டுவரும் செலவு- 463 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 33 பில்லியன் ரூபா

**பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சு**
மீண்டுவரும் செலவு- 5.4 பில்லியன் ரூபா
மூலதனச் செலவு - 11 பில்லியன் ரூபா

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### ரணிலின் கொள்கைகளை

மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவில்லை. அதன் ஊடாகவே எமக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் வித்தியாசம் இருப்பதை புரிந்துக்கொள்ள முடியும் என அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் ஆறு கட்டளைகள் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

அரசாங்கம் ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைகளை அமுல்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக கூறிவருகின்றன. கடந்த நூறு நாட்கள் அவர் அரசாங்கத்தில் இருந்திருந்தால் எத்தனை தடவைகள் வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பார்? ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அரச முறை பயணமாக இந்தியாவுக்குச் சென்றார். இரண்டாவது பயணத்தை மேற்கொள்ள உள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் இருந்திருந்தால் அவரது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் எத்தனை தடவை வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பார்கள்? எவ்வளவு செலவு செய்திருப்பார்கள்? எமது அமைச்சர்கள் எவரும் அவ்வாறு செய்யவில்லை.

கடந்த நூறு நாட்களில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் எம்.பிகளுக்கு எதிராக ஊழல் - மோசடி குற்றச்சாட்டை எவரும் முன்வைத்தார்களா?. கொடுக்கல் வாங்களில் மோசடி, விலை மனு கோரலில் மோசடி என எவ்வித குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படவில்லை. இலஞ்சம் பெற்றிருக்கிறார்கள் என எவ்வித குற்றச்சாட்டுகளும் இல்லை. அவ்வாறெனில் ரணில் விக்ரமசிங்கவை எவ்வாறு எம்முடன் சேர்த்து பேச முடியும்?

அரிசித் தட்டுப்பாடு உட்பட சில நடைமுறை ரீதியான பிரச்சினைகள் உள்ளன. நடைமுறை பிரச்சினைக்கும் முழுமையாக மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்துக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. இந்த நாட்டு மக்கள் இதுதொடர்பில்அறிவார்கள். 49நாட்களில்நாட்டைகட்டியெழுப்பமுடியாதென மக்களுக்கு தெரியும். ஏற்கனவே அமைச்சர்களாக இருந்தவர்களுக்கும் இது தெரியும். தெரிந்துகொண்டுதான் எம்மை உருவாக்குமாறு கோருகின்றனர்.

கிளீன் ஸ்ரீலங்கா உட்பட பல வேலைத்திட்டங்களை கிராமங்களுக்கு கொண்டுசென்றுள்ளோம். ஒரு ரூபா கூட ஊழல் செய்யாது இந்தப் பணிகளை செய்கின்றனர். கோப் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக தகவல்களை பெற்று ஊழல்-மோசடிகள் இடம்பெற்றால் அதனை ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்த முடியும்.

ஜனாதிபதி காலை 9 மணிக்கு ஆரம்பித்த கூட்டமொன்றை இரவு 7 மணிக்குதான் முடிந்தார் என்றும் இந்த கூட்டம் முடியும்வரை இரண்டு தேநீர் இடைவேளைகளை மாத்திரமே அவர் வழங்கினார் என்றும் நிதி அமைச்சின் அதிகாரி ஒருவர் என்னிடம் கூறினார். அவ்வாறுதான் நாம் பணியாற்றுகிறோம். எமது அமைச்சுகளிலும் அவ்வாறுதான் பணி இடம்பெறுகிறது. வரலாற்றில் இடம்பெற்ற தவறுகளை சரிசெய்து முன்னோக்கி பயணிக்க வேண்டியுள்ளது.” என்றார்.

### இஸ்லாம் அவமதிப்பு:

அத்துடன் , 1,500 ரூபாய் அபராதம் விதிப்பதாகவும் தீர்ப்பை அறிவித்து கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன, உத்தரவிட்டார்.

2016 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16 ஆம் திகதியன்று கிருலப்பனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், இஸ்லாம் மதத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டு இன நல்லிணக்கத்தை மீறும் வகையில் செயல்பட்டதாகக் குற்றம்சாட்டி தண்டனைச் சட்டத்தின் பிரிவு 291 இன் கீழ் ஞானசார தேரருக்கு எதிராக பொலிஸார் இந்த வழக்கைப் பதிவு செய்தனர்.

இதேவேளை, கலகொட அத்தே ஞானசார தேரர் தாக்கல் செய்த பிணை மனுவை கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன நேற்று (9) நிராகரித்துள்ளார்.

அந்த தண்டனைக்கு எதிராக தேரர் மேன்முறையீடு செய்துள்ளதால், மேன்முறையீட்டு மனு விசாரிக்கப்பட்டு இறுதி முடிவு அறிவிக்கப்படும் வரை ஞானசார தேரரை பிணையில் விடுவிக்குமாறு கோரி அவரது சட்டத்தரணிகள் இந்த பிணை மனுவை சமர்ப்பித்திருந்தனர்.

### அரிசி இறக்குமதி

நிறைவடைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே அரிசி இறக்குமதியை நிறுத்தியதாகவும் இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

மேலும், அரசாங்கம் சார்பில் 980 மெட்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்திருந்ததுடன் மேலும் 5200 மெட்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சொந்த நிலம்; சொந்த வீடு:

மலையக மக்கள் எப்போதும் பாதிக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். உலகவரைபடத்தில் லயன்களில் வாழ்பவர்களாக மலையக மக்களே இருக்கிறார்கள். எந்தவொரு அடிப்படை வசதியும் இன்றி மலையக மக்கள் வாழ்கின்றனர். அவர்களுடைய வாழ்வில் மாற்றம் மிகவும் முக்கியமானது.

நலன்புரி நடவடிக்கைகள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். நலன்புரி தேவைப்படுவோருக்கு இன்றி வசதிப்படைத்தோருக்கு நலன்புரி சென்றடைந்ததை காணமுடிகின்றது. தேவையுடையோர் பயனடைய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு” என்றார்.

### அரச ஊழியர்களுக்கு

அவ்வாறு தெரிவிக்கவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு இடம்பெறுவதற்கு முதல் நாள் அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்திருந்தார்.

அதற்கான சிறந்த பாடத்தை அரச ஊழியர்கள் கற்பித்திருந்தனர். உறுதியாக வரவு - செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு இடம்பெறும். ஆனால், எவ்வளவு அதிகரிக்கப்படும் என தற்போது கூற முடியாது. எதிர்க்கட்சிகள் இதுகுறித்து பீதியடைய தேவையில்லை.” என்றார்.

### இரு புதிய மேன்முறையீட்டு

அதன்படி, சட்டத்தரணி கே. எம். எஸ். திசாநாயக்க மற்றும் சட்டத்தரணி ஆர். பி. ஹெட்டியாராச்சி ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்து கொண்டார்.

### இலவச சீருடை விநியோகம்

2025 ஆம் ஆண்டுக்கான புதிய கல்வியாண்டு ஜனவரி 27 ஆம் திகதி ஆரம்பமாகிறது. அவ்வாரமே இலவச சீருடை விநியோகமும் ஆரம்பமாகுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இலவச சீருடை விநியோகம் தொடர்பான நடைமுறை விதிகள் தொடர்பான சுற்றறிக்கை சகல பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இலவச சீருடைகள் வலய, கோட்டக் கல்வி அதிகாரிகளால் பாடசாலை அதிபர்களுக்கு கையளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 10,000 க்கு மேற்பட்ட பாடசாலைகளில் சுமார் 40 இலட்சம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்களுக்கான சீருடைத்துணிகள் முழுவதையும் மக்கள் சீனக்குடியரசு இலவசமாக வழங்கியுள்ளது.

### இலங்கையில் HMPV நோயாளிக

HMPV வைரஸ் தொற்று தொடர்பில் சுகாதார அமைச்சு விழிப்புடன் இருப்பதாகவும், நாட்டில் வைரஸால் பாதிக்கப்பட்ட எவரேனும் கண்டறியப்பட்டால் மக்களுக்குத் தெரியப்படுத்த அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஆளுங்கட்சி எம்.பி நிஷாந்த சமரசிங்க ,எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

“வைரஸிற்கான சோதனைகளை மேற்கொள்ளும் இடங்கள் பெயரிடப்பட்டுள்ளன. அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.தொற்றுநோயியல் பிரிவு தொடர்ந்து வைரஸ் குறித்த விவரங்களை சுகாதார அமைச்சுக்கு வழங்கி வருகிறது. ஜனாதிபதியும் இந்த விடயத்தில் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளார்.சந்தேகத்திற்குரிய நோயாளி ஒருவர் பதிவாகியுள்ளார். ஆனால், அவருக்கு நடத்தப்பட்ட சோதனையின் பெறுபேறு எதிர்மறையாக உள்ளது.” என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், நோயெதிர்ப்பு தொடர்பான விசேட வைத்திய நிபுணர் பேராசிரியர் நீலிகா மாலவிகே சில காலத்திற்கு முன்பு இலங்கையில் உஆீஏ நோயாளிகள் கண்டறியப்பட்டதாகக் கூறியதை சில ஊடகங்கள் தவறாக மேற்கோள் காட்டியதாகவும், முக்கியமான பிரச்சினைகளை அறிக்கையிடும் போது பொறுப்புடன் செயல்படுமாறு ஊடகங்களைக் கேட்டுக்கொள்வதாகவும் அமைச்சர் கூறினார்.

### 17 மாத காலப்பகுதியில்

பெறத் தவறியது, விமான உதிரி பாகங்களைப் பெறுவதற்கு நீண்ட நேரம் எடுத்தது மற்றும் நிறுவனத்தின் பணப்புழக்க நிலைமை ஆகியவை இந்த தாமதங்களுக்கு முக்கிய காரணங்களாக அடையாளம் காணப்பட்டன.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க பல தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக விமான நிறுவனத்தின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல், 2023/2024 நிதியாண்டுக்கான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்வெளியிட்ட கணக்காய்வுஅறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரூ.3823 கோடி: சுற்றறிக்கையையும் மீறி மேலதிக நேர கொடுப்பனவு

## சுகாதார அமைச்சு செலவிட்டதாக கணக்காய்வு அறிக்கை

(கனுஷியா புஷ்பகுமார்)

சுகாதார அமைச்சு 2023ஆம் ஆண்டில் திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கைக்கு மாறாக, கூடுதல் நேர மற்றும் கட்டாய தினசரி ஊதியத்திற்காக 3823 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவழித்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கின்றது.

கூடுதல் நேரம் மற்றும் விடுமுறை நாட்களுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை சம்பள பட்ஜெட்டில் 72 வீதம் என்றும் அறிக்கை கூறுகிறது.

வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்காக மூன்று கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை செலவழித்து சுகாதார அமைச்சினால் நிறுவப்பட்ட 213 கைரேகை இயந்திரங்கள் செயலிழந்து காணப்படுவதாக தேசிய தணிக்கை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல் சுகாதார அமைச்சு தொடர்பாக வெளியிடப்பட்ட சமீபத்திய கணக்காய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



திருகோணமலை மாவட்ட புதிய அரசாங்க அதிபராக,இலங்கை நிருவாக சேவையின் விசேட தர அதிகாரி டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார,நேற்று(9) தமது உத்தியோகபூர்வ கடமைகளை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

(எஸ்.கீதபொன்கலன்)

## உதயநாயகனுக்கு சேவா திலகம் பட்டம் வழங்கி கௌரவம்




எஸ்.என்.உதயநாயகன் கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று, 24 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, அறங்காவலர் சபையின் சார்பில் அவருக்கு "சேவா திலகம்" என்ற பட்டமளித்து கௌரவித்தனர். நிகழ்வில் பொதுச்செயலாளர் சிவா இராஜஜோதி, பொருளாளர் சுந்தரம் தவகுமார், அறங்காவலர் கோபால் ஜீவரட்னம் ஆகியோரும் பங்கேற்றனர்.சாயி பஜனையும் நடைபெற்றது.

## இலங்கைக்கு எதிரான ஜெனீவா தீர்மானத்தை நிறைவேற்ற அழுத்தம்

### அமெரிக்கத் தூதுவரிடம் சிறிதரன் எம்.பி வலியுறுத்து



ஈழத்தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச போர்க்குற்ற விசாரணையைக் கோரும் வகையில் இலங்கைக்கு எதிரான ஜெனீவா தீர்மானத்தை நிறைவேற்ற அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டுமென இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அமெரிக்கத் தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவினருக்கும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் (08) மாலை கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே சிறிதரன் எம்.பி குறித்த விடயத்தை அமெரிக்கத் தூதுவரிடம் வலியுறுத்தியிருந்தார்.

அதேவேளை இச் சந்திப்பின் போது, இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல், புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழர்களுக்கான சமஷ்டித் தீர்வுக்கான சாத்தியமின்மைகள் எழும்போது அதுசார்ந்த அரசியல் நகர்வுகளின் தேவைப்பாடு மற்றும் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் சிறிதரனுடன் சக நாடாளுமன்ற உறுப்பினர்களான து.ரவிகரன், ப.சத்தியலிங்கம், இ.சிறிநாத், இரா.சாணக்கியன், ஞா.ஸ்ரீநேசன், ச.குகதாசன், க.கோடீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 26ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்:** இன்று கடின முயற்சிகளின் மூலம் வெற்றி கிடைக்கும்.

**ரிஷபம்:** இன்று உங்களுக்கான வளர்ச்சியில் நீங்கள் கவனம் செலுத்துவீர்கள்.

**மிதுனம்:** இன்று சகபணியாளர்களிடம் நல்லுறவைப் பேணுவது பயனளிக்கும்.

**கடகம்:** இன்று உங்கள் வாய்ப்புகளை வளர்த்துக் கொள்ள உகந்த நாள்.

**சிம்மம்:** நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் காணப்படும்.

**கன்னி:** இன்று ஓய்வின்றி வேலையில் மும்மரமாக இருப்பீர்கள்.

**துலாம்:** உங்களுக்கான வளர்ச்சியில் நீங்கள் கவனம் செலுத்துவீர்கள்.

**விருச்சிகம்:** இன்று உங்களுக்கு சாதகமான நாள்.

**தனுசு:** புதிய உறவுகள் ஏற்பட சாத்தியம் உள்ளது.

**மகரம்:** வெளியிடங்களுக்குச் செல்வது சிறப்பான உணர்வைத் தரும்.

**கும்பம்:** இன்று எடுக்கும் அனைத்து முயற்சிகளும் உங்களுக்கு வெற்றியைத் தரும்

**மீனம்:** இன்று நீங்கள் மகிழ்ச்சியை அனுபவிக்கும் நாள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று காலை 10:02 வரை ஏகாதசி பின்பு துவாதசி.
**நட்சத்திரம்:** இன்று பிற்பகல் 01:41 வரை கிருத்திகை பின்பு ரோகிணி.
**யோகம்:** சித்த,மரண.
**சந்திராஷ்டமம்:** சித்திரை,சுவாதி.
**சூலம்:** மேற்கு.
**இராகு காலம்:** 10:30 AM முதல் 12:00 PM வரை.
**குளிகை:** 07:30 AM முதல் 09:00 AM வரை.
**எமகண்டம்:** 03:00 PM முதல் 04:30 PM வரை.

### ஓய்வூதியதாரர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள்:

## ஓய்வூதியர் சங்கங்கள் நாளை அமைச்சருடன் சந்திப்பு

(முகம்மட் முக்தார்)

அரசாங்க ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதிய முரண்பாடுகள் தொடர்பாக பொதுநிருவாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரட்னவுக்கும் ஓய்வூதியர் சங்கங்களுக்குமிடையிலான சந்திப்பு நாளை (11) இடம்பெறவுள்ளதாக ஓய்வூதியர்களின் உரிமைகளை பேணிப்பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் செயலாளர் சரத்லால் பெரேரா தெரிவித்தார். 2016 முதல் 2019 வரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு 2020 முதல் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய அதிகரிப்பு, 1997 முதல் 2021 வரை ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய அதிகரிப்பு தொடர்பாக மேற்படி சந்திப்பின் போது அமைச்சருடன் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் சுமார் 700,000 அரச ஓய்வூதிய தாரர்கள் உள்ளனர். இவர்களுள் 2016 முதல் 2019 வரை ஓய்வு பெற்றும் 2020 ல் ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கப்படாத 118,000 பேர் உள்ளதுடன் 1997 முதல் 2021 வரை ஓய்வு பெற்ற அதிபர்,ஆசிரியர்கள் சுமார் 125,000 பேர் உள்ளனர்.

2025 ம் ஆண்டுக்கான புதிய வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக பாதிக்கப்பட்ட ஓய்வூதியதாரர்களுக்கான நிவாரணம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படும் சூழலில் அமைச்சருடனான சந்திப்பில் சாதகமான தீர்வு கிடைக்குமென செயலாளர் சரத்லால் பெரேரா தெரிவித்தார்.

## டயனா கமகேவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

போலி ஆவணங்களை சமர்ப்பித்து கடவுச்சீட்டைப் பெற்றதாகக் கூறி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை நேற்று (9) கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டது. பிரதிவாதி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஷனக ரணசிங்க, ஆரம்ப ஆட்சேபனைகளை எழுப்பி, இந்த வழக்கு அடிப்படையாகக் கொண்ட ஆவணம் 2003 இல் தயாரிக்கப்பட்டது என்று கூறினார்.

இருப்பினும், இந்த வழக்கு 2024 இல் தாக்கல் செய்யப்பட்டதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி, அதன்படி 20 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டதால், குறித்த ஆவணம் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்ய எந்த சட்ட அடிப்படையும் இல்லை என்று வாதிட்டார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த மேல் நீதிமன்ற நீதிபதி, இது குறித்த வழக்கு விசாரணையின் போது பரிசீலிக்கப்படும் என்று கூறினார். அதன்படி, வழக்கை மார்ச் 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதி உத்தரவிட்டார்.

## பெரும்போகத்திற்கான உர மானியமாக ரூ.25,000

### அரசாங்கம் நடவடிக்கை

பெரும்போகத்திற்கான உர மானியமாக 25,000 ரூபா மற்றும் பொட்டாசியம் உரத்தை இலவசமாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கென உர மானியத்தை வழங்க அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் 8ஆம் திகதி நாடாளுமன்ற விவாதத்தின் போது எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய,

ஒவ்வொரு மாவட்டத்திற்குமென உர மானியத்தை வழங்குவதற்கான கால எல்லை 2024 ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து 2025 பெப்ரவரி முதலாம் திகதி வரையாகும். இதற்கென 25,000 ரூபா உர மானியம், 15,000 ரூபா மற்றும் 10,000 ரூபா என்ற தவணை அடிப்படையில் இரு கட்டங்களாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது 15,000 ரூபா முதல் தவணை வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் உரத் தேவையை பூர்த்தி செய்வதற்காக சாதகமான மற்றும் உரிய செயன்முறையை முன்னெடுப்பதற்கு எமது அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்கென விவசாய அமைப்புகளிடமிருந்து கருத்துக்களை கேட்டறியும் நடவடிக்கையும் இடம்பெறுவதாக பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.

வயல் காணிகளில் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கென வழங்கப்படும் நிதி நிவாரணத்திற்கு மேலதிகமாக மியுரியேட் ஒப் பொடேஷ் உரத்தை அரசினால் இலவசமாக வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய குறிப்பிட்டார்.

## இலங்கை விமானப்படையின் "த கொமாண்டர்ஸ் கப் 2025"

இலங்கை விமானப்படையின "த கொமாண்டர்ஸ் கப் 2025" ஈகல்ஸ் கோல்ப் லீக்கின் தொடர் எதிர்வரும் 17ஆம் மற்றும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு நேற்று இலங்கை விமானப்படை தலைமையகத்தில் இடம்பெற்றிருந்தது. முதன்முறையாக விமானப்படை வீரர்கள் மற்றும் பெண் வீராங்கனைகளை கொண்டு இந்த போட்டிகள் நடாத்தப்படவுள்ளதுடன் வெளி போட்டியாளர்களும் இதில் கலந்துகொள்ளாம் எனவும் தெரிவிக்கபட்டது. மேலும் இந்த கோல்ப் தொடருக்கான உத்தியோகபூர்வ அனுசரணையை பிரபல வர்த்தக




நாமமான டயலொக் வழங்கியுள்ளது. நாட்டில் இவ்வாறான கோல்ப் போட்டிகள் நடத்தப்படுகின்றமையானது, விளையாட்டு சுற்றுலா துறைக்கும் பெரும் பங்களிப்பு செலுத்துவதோடு எமது உள்நாட்டு வீரர்களையும் ஊக்கப்படுத்துவதாக அமையும் எனவும் கொமான்டர் அசேல ஜெயசேகர இதன்போது தெரிவித்தார்.

## பதிவு செய்யப்படாத கையடக்க தொலைபேசிகளுக்கு விரைவில் தடை

### தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு அறிவிப்பு

தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவில் (TRC) பதிவு செய்யப்படாத கையடக்க தொலைபேசிகள் உள்ளிட்ட தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவது எதிர்காலத்தில் நாட்டினுள் தடைசெய்யப்படும் என்று அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டிற்குள் சட்டவிரோதமாக தகவல் தொடர்பு சாதனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்துவதே இதன் நோக்கம் என்று அதன் பணிப்பாளர் ஜெனரல் ஓய்வுபெற்ற ஏர் வைஸ் மார்ஷல் பந்துல ஹேரத் தெரிவித்தார்.

இந்த மாத இறுதிக்குள் இதற்காக ஒரு சிறப்பு திட்டத்தை அறிமுகப்படுத்த இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.இருப்பினும், இந்த புதிய திட்டம் தற்போது பயன்படுத்தப்படும் கையடக்க தொலைபேசிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் அவர் தெரிவித்தார்.

"முறையான தரநிலைகள் இல்லாமல் சட்டவிரோத தகவல் தொடர்பு சாதனங்களை வாங்குவதன் மூலம் நாட்டு மக்கள் பல்வேறு சிரமங்களையும் தடைகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நாட்டில் உள்ள நுகர்வோருக்கு இதுபோன்ற சாதனங்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுப்பது எமது நிறுவனத்தின் முக்கிய பொறுப்பாகும். இதற்காக, இந்த மாத இறுதிக்குள் ஒரு தானியங்கி அமைப்பை செயல்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், இறுதியில் நாட்டிற்குள் சட்டவிரோதமாக கையடக்க தொலைபேசிகளை இறக்குமதி செய்வதைத் தடுப்பதும் இதன் நோக்கமாகும். இந்த அமைப்பு தற்போது பயன்பாட்டில் உள்ள எந்த கையடக்க தொலைபேசிகளையும் பாதிக்காது என்பதுடன், வெளிநாட்டினர் பயன்படுத்தும் தொலைபேசிகளுக்கும் எந்த தடையும் ஏற்படுத்தாது என்றார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com


## ஈடுகொடுக்குமா இலங்கை...?

அகதிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தெரிவித்திருக்கின்ற தகவல் பெரும் பேசு பொருளாக மாறியிருக்கிறது. அகதி என்ற சொல் நமக்குப் புதிதல்ல. கூடுதலாக, அகதி என்ற உணர்வில்தான் நாமும் இருக்கிறோம்.

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட அகதிகள், எதிர்வரும் நாட்களில் சட்டவிரோதமாக இலங்கைக்கு வரக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால நாடாளுமன்றத்திலே அறிவித்தார். (08/01/2025). இலங்கையின் புலனாய்வு தகவல்களை இதற்கு ஆதாரம் காட்டும் அமைச்சர், தேசிய பாதுகாப்பிலும் கவனமாக இருக்கிறோம் என்று சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இந்த எண்ணிக்கை நமக்கு ஒரு பிரமிப்பை ஏற்படுத்தினாலும், உலக நடப்புகளை வைத்து பார்க்கின்ற பொழுது, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

மியன்மாரில் இருந்து எங்கோ செல்வதற்கு புறப்பட்ட அகதிகள்.... இயற்கையின் சீற்றத்தால், நம் நாட்டின் முள்ளிவாய்க்காலில் கரை ஒதுங்கினார்கள். அவ்வாறு இலங்கை வந்தடைந்த 116 மியன்மார் ரோஹிங்கிய அகதிகள், முல்லைத்தீவு முகாம் ஒன்றில் வைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இவர்களது வருகை, வேறு நாடுகளில் இருந்து அரசியல் தஞ்சம் கோர முற்படுபவர்களையும் ஈர்க்கக் கூடும் என்பது இலங்கை அரசின் நிலைப்பாடாக பார்க்க முடியும்.

இலங்கையில் தஞ்சம் அடைந்துள்ள ரோஹிங்கியர்களை தாயகம் திருப்புவதற்கான நடவடிக்கைகளில் இலங்கை அரசு முனைப்பு காட்டுகிறது என்பதும் உண்மை.

அகதி அந்தஸ்து கோரியுள்ள மியன்மார் நாட்டின் ரோஹிங்கிய முஸ்லிம்கள் 116 பேரும், அகதி அந்தஸ்து கோருவதற்கு பொருத்தமானவர்களா..? என்பதை கண்டறிந்த பின்பே, சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப செயல்பட முடியும் என அமைச்சர் ஆனந்த விஜயபால கூறுகிறார்.

உண்மையில், அகதி என்பவர்கள் யார் என்பதற்கு உலகம் வரையறை வகுத்திருக்கிறது. இவர்கள் தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபை எடுத்திருக்கின்ற தீர்மானம், மூச்சு விடுவதற்கு கொஞ்சம் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அகதிகளின் உரிமைகளையும், புகலிடம் கொடுத்த நாடுகளின் பொறுப்புகளையும் ஐக்கிய நாடுகள் சாசனம் முறையாக கூறுகிறது.

போர், பட்டினி, கடும் வறட்சி, வன்முறைகள், இயற்கை அனர்த்தங்கள்,. உட்பட இடர்களுக்குள் அகப்பட்டு இடம்பெயர்ப வர்களே "அகதிகள" என ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்திருக்கிறது. 2001 ஆம் ஆண்டு, இதனை அகதிகள் பிரகடனமாக ஐநா வெளியிட்டு இருக்கிறது.

இது இலங்கைக்கும் பொருந்தும், அகதிகள் பிரச்சினை நமக்கும் புதிதான விடயம் அல்ல. 1983 ஆம் ஆண்டு, இனக்கலவரத்தின் பின்னர், இலட்சக்கணக்கான தமிழர்கள், அகதி அந்தஸ்துக் கோரி உலகம் முழுவதும் தஞ்சம் அடைந்தார்கள். ஐரோப்பிய நாடுகளில் மனிதாபிமானம் பேசியதால், இலட்சக்கணக்கான தமிழர்கள் புலம்பெயர்ந்துதான் வாழ்கிறார்கள்.

இந்த நிலையில், இலங்கையில் தஞ்சம் அடைந்துள்ள ரோஹிங்கிய அகதிகள் விடயத்தில், இலங்கை சர்வதேச நியமத்தை கடைப்பிடிப்பதே ஆரோக்கியமாக இருக்கும்.

உலகச் சட்டங்களும், இலங்கையின் சட்ட வரையறைகளும் என்னதான் கூறினாலும், இங்கே, மனிதாபிமானம் தலை நிமிர்ந்து பேச வேண்டும்.

உலகம் முழுவதும் அகதிகள் எண்ணிக்கை முதல்முறையாக 10 கோடியைத் தாண்டியுள்ளதாக ஐ.நா அகதிகள் அமைப்பு (UNHCR) தெரிவித்திருக்கிறது.

"மோதல்கள், வன்முறை, மனித உரிமை மீறல்கள், துன்புறுத்தல்களால் வீடுகளைவிட்டு வெளியேறிய அகதிகள் எண்ணிக்கை 10 கோடியைத் தாண்டியுள்ளது. 10 கோடி என்பது மிகப்பெரிய எண்ணிக்கையாகும். மோதல்களுக்குத் தீர்வு காணவும், துன்புறுத்தல்களை முடிவுக்குக் கொண்டுவரவும், அப்பாவி மக்கள் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறுவதற்கு காரணமான பிரச்சினைகளைத் தீர்க்கவும் இந்த எண்ணிக்கை ஓர் எச்சரிக்கையாக அமைய வேண்டும்" என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையாளர் நாயகம் தெரிவித்திருக்கிறார்.

பலஸ்தீனம் மீது இஸ்ரேல் நடத்துகின்ற தாக்குதல்கள், ரஷ்யா - உக்ரேன் மோதல், எத்தியோப்பியா, மியான்மார், நைஜீரியா, ஆப்கானிஸ்தான், கொங்கோ குடியரசு... உட்பட பல்வேறு, நாடுகளில் நடைபெற்று வரும் மோதல்களால் அகதிகள் எண்ணிக்கை உலகம் முழுவதும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வறிக்கையின்படி, உலகெங்கும் ஒவ்வொரு நிமிடமும், சராசரி 20 பேர் அகதியாக மாற்றப்படுகிறார்கள். வன்முறையும் யுத்த சூழ்நிலைகளும் இந்த அவலத்துக்கு காரணமாக அமைகின்றன.

இந்த நிலையில், இலங்கையிலும் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட வெளிநாட்டு அகதிகள் தஞ்சம் அடைவார்கள் என்று அரசாங்கம் கூறுவது, மனிதாபிமானத்துக்கும் அப்பால், நாம் சிந்திக்க வேண்டி இருக்கிறது. இலங்கை இப்போது அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்பதில் நமக்கு ஒரு மகிழ்ச்சி. இந்தச் சூழ்நிலையில், பாதிக்கப்படுகின்ற மக்கள், அமைதியை தேடி இங்கு வருவதில் ஆச்சரியம் இருக்காது. ஆனால், அகதி அந்தஸ்து கோரி வருகின்ற மக்களை, சகல வசதிகளுடனும் பராமரிக்க கூடிய தகுதி, இந்த நாட்டுக்கு இருக்கிறதா...? என்ற கேள்வி எழுகிறது. இலட்சக்கணக்கான அகதிகள், இந்த நாட்டுக்குள் வருவார்களாக இருந்தால், அவர்களை எவ்வாறு பராமரிக்கலாம் என்பதை அரசு இன்னும் தீர்மானித்ததாக தெரியவில்லை. முன்னெச்சரிக்கை விடுத்திருக்கின்ற இந்த அரசாங்கம், தஞ்சமடைபவர்களை கையாள்வதிலும் முன்னேற்பாடுகளை செய்து கொள்வது நல்லது.

பொருளாதாரத்தில், நலிந்து போய், இருக்கின்ற நமக்கு, இலட்சக்கணக்கான அகதிகள் நாட்டுக்குள் வந்தால், பெரும் சுமையைத் தவிர வேறொன்றும் இருக்கப் போவதில்லை. என்றாலும், இந்த நாட்டு கட்டுப்பாடுகளையும் மீறி, சட்டவிரோதமாக வெளிநாட்டு அகதிகள் நாட்டுக்குள் வருவார்களாக இருந்தால், ஐ.நாவின் உதவியை நாடுவது நமது கடமை. ஐ.நாவின் ஒரு பிரிவாக இருக்கின்ற, அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் - UNHCR இந்த அகதிகளை பொறுப்பேற்கும் அளவுக்கு அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைய வேண்டும். தவறினால், சுமையை நாடு தாங்காது.





# கொந்தளிக்கும் திருமலை மக்கள்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கடந்த கால அரசாங்கங்கள் ஆட்சியாளர்களாக இருந்தது தொடக்கம் இற்றை வரை மக்களின் தனியார் நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக வடகிழக்கில் சிறுபான்மை சமூகங்களின் விவசாய, குடியிருப்பு காணிகள் கபளீகரம் செய்யப்படுகிறது இதனடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் நில ஆக்கிரமிப்பு தொடர்வதால் மக்கள் கொந்தளிக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கள் நாட்டை பொறுப்பேற்றதன் பின்பும் கூட தீர்வு இல்லாமல் காணப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாய், முத்து நகர், சம்பூர் உள்ளிட்ட தனியார் விவசாய மற்றும் குடியிருப்பு காணிகளை தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், இலங்கை துறைமுக அதிகார சபை உள்ளிட்ட பல அரச திணைக்களங்கள், பௌத்த பிக்குகள் போன்றோர் அபிவிருத்தி என்ற போர்வையிலும் புனித பூமி என்ற போர்வையிலும் அடாத்தாக நிலங்களை அபகரித்துள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக திருகோணமலை மாவட்ட திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முத்து நகர் பகுதி விவசாயிகள் 2025.01.03 அன்று கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

குறித்த கவனயீர்ப்பானது திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் முன்பாக இடம் பெற்றது. முத்து நகர் பகுதியில் உள்ள விவசாய காணிகளை சூரிய மின் உற்பத்தி நிறுவனத்துக்கு வழங்க வேண்டாம் என கோரி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

குறித்த கவனயீர்ப்பை முத்து நகர் ஒன்றிணைந்த அனைத்து விவசாய சம்மேளனங்கள் மேற் கொண்டிருந்தனர்

குறித்த கவனயீர்ப்பில் விவசாய காணியை அபகரிக்காதே, வயிற்று பசிக்கு சோலர் பவரா, மாவட்ட தலைவரே உங்கள் கவனத்திற்கு உள்ளிட்ட பல வாசகங்களை ஏந்தியவாறும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். குறித்த முத்து நகர் பகுதியில் ஐந்து சிறு குளங்களை கொண்ட 1600ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் 1200 விவசாயிகள் விவசாய செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர் 50 ஏக்கருக்கும் மேற்பட்ட மேட்டு நிலப் பயிர்களுக்கும் இதில் மேற்கொள்ளப்பட்டு சுமார் 5000 குடும்பங்கள் பயனடைகின்றனர். கடந்த வருடத்தில் (2024) வாரி சௌபாக்கியா திட்டத்தின் கீழ் அரசாங்கம் குளங்களை திருத்த நிதி ஒதுக்கீடு செய்தது தகரவெட்டுவான் குளம் 80 வீதம் திருத்தப்பட்ட நிலையில் இலங்கை துறை முக அதிகார சபையால் நிறுத்தப்பட்டது. இதே போல் அம்மன் குளத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு திருத்தம் செய்ய அனுமதியை மறுத்து தடுத்து நிறுத்தியதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் விவசாய சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் இவ்வாறு தெரிவிக்கிறார், சோளர் பவர் திட்டத்தை எமது விவசாய பகுதிக்குள் நடைமுறைப்படுத்தினால் குளங்கள் மூடப்படலாம், எப்படி அபிவிருத்தி செய்வது நாட்டுக்கு வருடந்தோரும் பெரும்போகத்தில் 1600 ஏக்கர் X70 புசல் = 112,000 நெல்லை உற்பத்தி செய்து தரும் எமது வாழ்வாதார ஜீவனோபாய வயல் நிலங்கள் பறிக்கப்படுமாக இருந்தால் விவசாயிகளான நாம் இத் திட்டத்தை எதிர்த்து போராடுவதன் மூலம் நம் உயிரை விடவும் ஆயத்தமாக உள்ளோம் எனவே தயவு கூர்ந்து இந்த வயற் காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தி நாங்கள் வேளாண்மையை தொடர்ந்து செய்கை பண்ண நிலத்தை விடுவித்து தாருங்கள் என மேலும் தெரிவித்தார்.

இதன் போது மகஜர் ஒன்றினை இன்றைய தினம் இடம் பெற்ற திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ரொசான் அக்மீமன, சண்முகம் குகதாசன் ஆகியோரிடத்தில் கையளித்தனர்.

இது தவிர சம்பூர் பகுதியில் அனல் மின் நிலையம் ஒன்றை அமைக்க எதிர்பார்த்துள்ள நிலையில் மக்கள் இதனை தடுக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்துள்ளனர். அமெரிக்காவை தலைமையகமாக கொண்டு இயங்கும் ஒக்லேண்ட் அறிக்கையின் பிரகாரம் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலக பகுதியில் தான் அதிகளவான நில அபகரிப்புக்கள் இடம் பெற்றுள்ளதாக குறித்த ஆராய்ச்சி முடிவின் பிரகாரம் தெரிவிக்கப்படுகிறது. தற்போதைய அரசாங்கம் பொய் சொல்லி ஆட்சிக்கு வந்தார்களா என்ற சந்தேகம் எழுகின்றது .அண்மையில் கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்து வைத்த போதிலும் குறிப்பிட்ட குழுவில் சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த எவரும் நியமிக்கப்படவில்லை என்பதனால் சிறுபான்மை மக்கள் மீது கசப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறாக தொடர்ச்சியான நில அபகரிப்பால் மக்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். அண்மைய நில மீட்பு போராட்டம் ஒன்று தொல்லியல் திணைக்களத்தினால் காணிகள் கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு முன்பாக புது வருடப் பிறப்பன்று (01.01.2025) மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் தொல்லியல் சின்னங்கள் இல்லாத தனியாருக்கு சொந்தமான காணிகளையும், பிரதேச சபைக்கு சொந்தமான காணிகளையும் தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தே அப்பகுதி மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது "புதைபொருள் திணைக்களமே குச்சவெளி சந்தைக்கட்டட காணியை புதைக்காதே", "தொல்பொருள் திணைக்களமே குச்சவெளி நெற்களஞ்சிய கட்டடத்திற்கு தொல்லை தராதே", "தொல்பொருள் அதிகாரிகளே சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே வேற்றுமையை உண்டாக்காதே" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும், கோசங்களையும் எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். குறித்த ஆர்ப்பாட்டத்தில் குச்சவெளி கிராம சங்கங்கள், பொதுமக்கள் மற்றும் அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் கலந்து கொண்டிருந்தார்கள்.

குறித்த காணிகளை கையகப்படுத்தும் முகமாக அப்பகுதிகளில் எவ்வித அறிவித்தலும் இன்றி இரவோடு இரவாக பெயர்ப்பலகையை காட்சிப்படுத்தியுள்ளதாகவும் இந்த காணிகளில் தொல்லியல் சின்னங்கள் எவையும் இல்லாத நிலையில் தொல்லியல் திணைக்களம் இந்த காணிகளை கையகப்படுத்த முயற்சிப்பதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன் பிரதேச சபைக்குச் சொந்தமான 1985ஆம் ஆண்டுக்கு முன்னர் கடைத்தொகுதிகளுடன் காணப்பட்ட பகுதியும்



மற்றுமொரு இடத்தில் நெற்களஞ்சியமாக காணப்பட்ட பழைய கட்டடங்களுடன் கூடிய பகுதியையும் தொல்லியலுக்குரிய இடமாக கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதனால் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் இதை அனுமதிக்க முடியாது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த சட்ட விரோதமான செயற்பாட்டிற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குச்சவெளி பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் மாவட்ட செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் மற்றும் அரசியல்வாதிகளிடமும் இது தொடர்பான மகஜர்களை கையளிக்கவுள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் இது தொடர்பாக தொல்லியல் திணைக்கள் திருகோணமலை மாவட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும் இது தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டது எனவும் அவர்களுடன் கலந்தாலோசித்து தீர்வினை பெற்றுத்தர முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

பல முறை நில மீட்பு போராட்டங்களை நடாத்தி களைத்துப் போயுள்ளனர். திரியாய் பகுதியிலும் விவசாய காணிகளை அப்பகுதி விகாராதிபதி ஒருவரான அரிசி மலை பௌத்த பிக்கு அடாவடியாக தனியார் காணிகளுக்குள் அத்து மீறி நிலத்தை உழுது நெற்செய்கைக்காக தயார் படுத்தியதனால் மக்கள் போராட்டம் அங்கு எழுந்தது இது தொடர்பில் உரிய தரப்புக்களுக்கு அறிவித்த போதும் எது வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என அப் பகுதி விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

தொடர் நில அபகரிப்பால் சிறுபான்மை சமூகங்களை சேர்ந்த தமிழ் முஸ்லிம் மக்களே பாதிக்கப்படுகின்றனர். நெற் செய்கையை வாழ்வாதாரமாக நம்பி வாழும் விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எந்த அரசாங்கம் மாறி மாறி ஆட்சியை பொறுப்பேற்றாலும் நில அபகரிப்புக்கள் தொடர்ந்து கொண்டே உள்ளது. வெருகல் பகுதியில் தொல்பொருள் திணைக்கள பதாகை நடப்பட்டதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டதுடன் (2025.01.08) அன்று அப் பகுதி மக்கள் கவனயீர்ப்பிலும் ஈடுபட்டனர்.

எனவே நில ஆக்கிரமிப்பை தடுக்க புதிய அரசாங்கம் புதிய பொறிமுறைகளை உருவாக்க வேண்டும் என்பதே மக்களது எதிர்பார்ப்பாகும்.



# அரச பணியாளர்களே மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம்

## வடக்கு மாகாண ஆளுநர்





(பு.கஜிந்தன்)

அரசாங்க பணியாளர்களின் நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் ஊடாக மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

"கிளீன் சிறிலங்கா" திட்டம் தொடர்பில் வடக்கு மாகாண அலுவலர்களுக்குத் தெளிவுபடுத்தும் நிகழ்வு வடக்கு மாகாண பிரதம செயலர் அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலர் திருமதி சாரதாஞ்சலி மனோகரன் கலந்து கொண்டு, "கிளீன் சிறிலங்கா" வேலைத் திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்களை வழங்கியதுடன், அரசாங்க அலுவலர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

இதன் பின்னர் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர்,

"கிளீன் சிறிலங்கா" கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு. மக்களின் சேவைகளை விரைவாகவும், தரமாகவும், அன்பாகவும் வழங்குவது அரச பணியாளர்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பு எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், அந்த மாற்றத்தை அரச பணியாளர்களின் நடத்தையில் ஏற்படுத்துவதன் ஊடாக செய்ய முடியும் என்று குறிப்பிட்டார்.

மேலும், இந்த நடத்தை மாற்றங்கள் உடனடியாகச் செய்யக் கூடியவை. 2025ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் இந்த மாற்றங்களை ஏற்படுத்தும் ஆண்டாக மாற்றுவோம் என்றார்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் மலையக தியாகிகள் தினம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மலையக தியாகிகள் தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று அனுஷ்டிக்கப்படும். "மலையக மண்ணில் எம்மவரின் அடிப்படை உரிமைகளுக்காக தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த எம் சொந்தங்களை நினைவு கூறுவோம்" எனும் தொனிப்பொருளில் இன்று (10) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பல்கலைக்கழக பொது நினைவுத் தூபிக்கு முன்பாக இந்நிகழ்வு இடம்பெறும்.

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக ரட்ணகுமார் நிசாந்தன் நியமனம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு புதிய பிரதேச செயலாளராக ரட்ணகுமார் நிசாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்களத்தில் பிரதி ஆணையாளராக பணியாற்றிய இவர் ஜனாதிபதி செயலகத்தில் உலக உணவுத்திட்ட ப் பணிப்பாளராக பணியாற்றினார்.

# சுன்னாகம் புகையிரத நிலையத்தின் 10ஆம் ஆண்டு நிறைவு



யுத்தத்தின் பின் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் திகதி, மீள ஆரம்பிக்கப்பட்ட சுன்னாகம் புகையிரத நிலையம் இந்த வருடம் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 05ஆம் திகதி 10 ஆவது ஆண்டினை நிறைவு செய்துள்ளது. இது கடந்த காலங்களில் மக்களுக்கான பல்வேறு அர்ப்பணிப்பான சேவையினையும் அப்பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டுள்ளது. அதேவேளைக் கடந்த 2019ஆம் ஆண்டு முதல் ஆசன முன்பதிவு வசதிகள் மற்றும் வடபகுதி புகையிரத நிலையங்களில் முதன்முதலாகப் பயணிகள் நூலகம் என்பன இப்புகையிரத நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், வருங்காலத்தில் பொதிகள் மற்றும் பண்டங்கள் சேவை மற்றும் வாகன பாதுகாப்பு சேவை(vehicle park) என்பனவற்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கை புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றும் ஶ்ரீ.ஶ்ரீவாகீசனால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# யாழ். ஏழாலை உப அலுவலகத்தின் நடமாடும் சேவை

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடமாடும் சேவையானது, பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்தின் உத்தியோகத்தர் குழுவினரால் எதிர்வரும் சனிக்கிழமை(11) கோட்டைக்காடு சைவ வாலிபர் சங்க சனசமூக நிலையத்தில் காலை 8.30 தொடக்கம் மதியம் 1.00 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதன்போது பொதுமக்கள் தங்களது ஆதனங்களுக்கான ஆதன வரிகளை விரைவாக செலுத்துவதற்காகவும், வியாபாரங்கள் தொழில்களுக்கான வரி, உரிமக் கட்டணங்களை இலகுவாக செலுத்துவதற்காகவும் இது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட சேவைகளை பொதுமக்கள் இவ் நடமாடும் சேவையின் மூலமாக விரைவாகவும் இலகுவாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுண்ணக்கல் அகழ்வில் சட்டவிரோத செயற்பாடுகள்; உடன் நிறுத்த வேண்டும்

## பொ. ஐங்கரநேசன் கோரிக்கை

(பு.கஜிந்தன்)

சுண்ணாக்கல் அகழ்வை நெறிப்படுத்துவதோடு, இதில் நிலவக்கூடிய சட்டவிரோதச் செயற்பாடுகள் அனைத்தும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கட்டுப்பாடற்ற சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வு காலநிலை மாற்றத்தால் ஏற்படவுள்ள பாதகங்களை மேலும் விரைவுபடுத்தும், அதிகப்படுத்தும் என்றார்..

வடமாகாண ஆளுநரிடம் சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வை முடிவுறுத்தக்கோரி பொ.ஐங்கரநேசன் நேற்று வியாழக்கிழமை (09) மனுவொன்றைச் சமர்ப்பித்த பின்னர் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் சுண்ணக்கல் வடமேற்கு மாகாணத்திலும், வடக்கு மாகாணத்திலும் கரையோரத்தை அண்டிக் காணப்படும் ஒரு இயற்கை வளமாகும். புவிச்சரிதவியல் வரலாற்றில் பல மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட மயோசின் காலத்தில் கடலின் அடித்தளப் படிவுகளாகத் தோற்றம் பெற்ற இப்பாறைகள் சீமெந்து தயாரிப்பிலும், இதர கட்டுமானங்களிலும் பிரதான மூலப் பொருளாக விளங்குகின்றது. கூடவே, சூழலியல் ரீதியாகக் கடல் நீர் நிலத்தடி நீருடன் கலப்பதைத் தடைசெய்வதிலும், நிலத்தடி நீரோட்டத்திலும் மிகவும் இன்றியமையாத பங்களிப்பையும் வழங்கி வருகிறது. சமீப நாட்களாகச் சுண்ணக்கல் அகழ்வும் அதனை வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதும் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது. சுண்ணக்கல் அகழ்வு பயிர்ச் செய்கைக்காக இரண்டடி ஆழம் வரையில் கிளறி எடுத்தல் என்ற நிலையிலிருந்து, இன்று சீமெந்து தயாரிப்புக்காகக் கனரக வாகனங்களைக் கொண்டு அகழ்ந்தெடுத்தல் என்ற நிலைக்கு மாறியுள்ளது.

குறிப்பாக, தென்மராட்சி சரசாலையில் அனுமதியின்றிச் சட்டவிரோதமாக அரச காணிகளிலும், தனியார் காணிகளிலும் பாரிய அளவில் சுண்ணக்கல் அகழ்வு இரவு நேரங்களில் இடம்பெற்று வருகிறது.



காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை இயக்கப்படா திருப்பதற்குச் சுண்ணக்கல் பெறுவதில் உள்ள இடர்பாடுகளே காரணம்.

இந்நிலையில் இங்கிருந்து வேறு மாவட்டங்களுக்குச் சுண்ணாம்புக்கல்லை எடுத்துச்செல்வது மக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து சுண்ணக்கல் வெளிமாவட்டங்களுக்குத் தங்கு தடையில்லாமல் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆளுநர் உடனடியாக சுண்ணக்கல் அகழ்வில் நிலவும் சட்டவிரோத செயற்பாடுகளைக் களைய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# காரைநகரில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்





(பு.கஜிந்தன்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதுடன் மீன்பிடி படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்களை 23.01.2025 வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருகையில்,

இலங்கை கடற்படை மற்றும் கடலோர காவல்படையினர் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் – காரைநகர், கோவளம் கலங்கரை விளக்கத்தில் நடத்திய விசேட நடவடிக்கையின் போது இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீன்பிடி படகை கைப்பற்றியதுடன் 10 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக சட்டநடவடிக்கைக்காக யாழ். கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 23.01.2025 வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற பதில் நீதிவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டார்.

# யாழில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

(பு.கஜிந்தன்)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட யாழ்ப்பாணம் – வடமராட்சி வீதி வல்லை பகுதியில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 07.30 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது, பருத்தித்துறை – புற்றாளை பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் மதிவண்ணன் என்ற 21 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிக் குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது மாட்டுடன் மோதுண்டு பின்னர் எதிரே வந்த முச்சக்கர வண்டியுடன் மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது. படுகாயமடைந்த இளைஞர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மியன்மார் அகதிகள் இருவர் வைத்தியசாலையில்

(அந்தணன்-முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் கடந்த இரண்டு வராங்களுக்கு மேலாகத் தங்கவைக்கப்பட்டுள்ள 115 மியன்மார் ரோஹிங்கிய அதிகளில் இருவர் உடல்சுகயீனமுற்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று அதிகாலை வேளை குறித்த அகதிகளில் இருவருக்கு வயிற்று வலி காரணமாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

33 வயதுடைய பெண் ஒருவரும் 12 வயதுடைய சிறுவனுமே முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் விடுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# யாழில் சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ். சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று (10) நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறும்.

சித்தன்கேணி ஶ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலய பிரதம குரு சிவஶ்ரீ மகேந்திர. சந்திரஹாசக் குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறும்.

# சட்டவிரோதமாக வெட்டப்படும் மரங்கள்

(ஜதுர்சிகா)

வவுனியா பூவரசன் குளம் கோயில் மோட்டை ஆகிய பகுதிகளில் தொடர்ந்தும் காடுகளில் சட்டவிரோதமான முறையில் பெறுமதி வாய்ந்த மரங்கள் பகல் வேளைகளில் வெட்டப்பட்டு கனரக வாகனங்களில் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். வவுனியா மாவட்டத்தின் பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவரசன் குளம் காட்டுப் பகுதி மற்றும் பம்பை மடு கோயில் மோட்டை ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாகச் சட்டவிரோதமான முறையில் காடுகளுக்குள் தினமும் பெறுமதி வாய்ந்த மரங்கள் வெட்டப்பட்டு பலகைகளாகவும் அறுத்து ஏற்றிச் செல்லப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.



அதாவது குறித்த பிரதேசத்திலிருந்து சட்ட விரோதமாகக் கொண்டு செல்லப்படும் காட்டு மரங்கள் தொடர்பாக யாரையும் கைது செய்வதற்கோ அல்லது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்று தெரிவிக்கும் மக்கள், இதன் பின்னணியில் பொலிஸாரே இருந்து செயல்படுவதாகவும் கூறுகின்றனர்.

# திருடர்களின் சினிமா

## Bonnie and Clyde

அமெரிக்க இயக்குநரான ஓர்தர் பென்னினால் 1967 இல் இயக்கப்பட்டு, கதாப்பாத்திரங்களின் சிறப்பான நடிப்பின் மூலமும், கதையின் புதுவித யுக்தியின் மூலமும் வசூலில் சாதனை படைத்த திரைப்படம்தான் **Bonnie and Clyde.** திருடர்களின் கதைகள் மூலம் பிற்கால திரைப்படங்கள் ஆக்கிரமிக்கப்படுவதற்கு மூலகாரணமாக அமைந்ததே இத்திரைப்படம். நாயகனும், நாயகியும் கொள்ளைக்காரர்களாக அறிமுகப்படுத்தப்பட்டு புதிய யுக்திகளில் திருடுகின்ற முறையினை காட்சிப்படுத்தியிருப்பார் இயக்குநர். திருட்டுகளின் போது தவிர்க்க முடியாமல் நிகழ்கின்ற கொலைகள் இத்திரைப்படத்திலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்தே கொள்ளைக்காரர்களும், கொலைகாரர்களாக அடையாளப்படுத்தப்பட்டு தேடுதலுக்கு உள்ளாகிறார்கள். காதலர்களான நாயகனும், நாயகியும் பிரபல்யமடைவதற்காக ஒரு வங்கியில் திருட முற்படும் போது காவலாளர்களால் துரத்தப்படுகிறார்கள். அதிலிருந்து விரிந்து செல்லும் இத்திரைப்படம் கொலை, கொள்ளை என புதிய அலை சினிமா அமைப்பினை அக்காலத்தில் தோற்றுவித்தது எனலாம். கருத்தியல் ரீதியாக பெரும் வாதங்களை இத்திரைப்படம் ஏற்படுத்தியது. ஒரு கதையினை வடிவமைக்கின்ற தன்மையிலிருந்து வேறுபட்டு, சமூக அவலமான செயற்பாடுகளை படமாக்கியதாக இயக்குநர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. பின்னர் அவ்வகையான கதையாடல்கள் முறியடிக்கப்பட்டு, இது போன்ற ஏராளமான திரைப்படங்கள் உருவாக்கப்பட்டு பெரும் வெற்றிகளை சுவீகரித்துக் கொண்டன...

இறுதியில் நாயகனும், நாயகியும் கொல்லப்படுகின்றனர். மிக அற்புதமான நடிப்பின் மூலம் தனக்கான இடத்தினை நிரூபித்த கதாப்பாத்திரங்களை இத்திரைப்படத்தில் நாம் தரிசிக்கலாம். நாயக விம்பத்தினை உயர்திக் காட்டுகின்ற தன்மையிலிருந்தும், யதார்த்தத்தினை மீறிய அமைப்பிலிருந்தும் விடுபட்ட இத்திரைப்படம் கொள்ளை வாழ்வின் அசாதாரண முறைகளை கைவசப்படுத்திய படைப்பாகும். பிரெஞ்சின் புதிய அலைப் போக்கில் இயக்கப்பட்ட ஒரு விசித்திரமான கதையமைப்பினை இத்திரைப்படத்தில் அவதானிக்கலாம். குறுகிய உரையாடல்களில் மிகக் காத்திரமான விடயத்தினை அடையாளப்படுத்தியிருப்பார் இயக்குநர். நெறி தவறும் வாழ்வின் இறுதி நிலையினை காட்சிப்படுத்திய **Bonnie and Clyde** ஒரு விசித்திர சினிமாவாகும்...




# கதைகளின் மொத்த கூட்டு - மகாராஜாவின் ரயில் வண்டி




அ. முத்துலிங்கம் கதைகளின் உற்பத்தி. யாழ்ப்பாணத்தில் பிறந்து கதைகளின் உயர்வினையும், மானிடர்களின் பல்தரப்பட்ட போக்கினையும் தன் எழுத்துக்களில் வடித்தவர். 1964இல் வெளியான அக்கா கதை மூலம் தினகரன் சிறுகதை பரிசுப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்று தனக்கான தளத்தினை உருவாக்கிக் கொண்டார். நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் 1995இல் செயற்படத் தொடங்கிய அ. முத்துலிங்கம் சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள் என இலக்கியப் பணியின் வேகத்தினை அதிகரித்தார். உண்மை கலந்த நாட்குறிப்புகள் எனும் புதினத்தையும். அக்கா, திகடசக்கரம், வம்சவிருத்தி, வடக்கு வீதி, மகாராஜாவின் ரயில் வண்டி, அ. முத்துலிங்கம் கதைகள், ஒலிப்புத்தகம், அமெரிக்கக்காரி, குதிரைக்காரன், கொழுத்தோடு பிடிப்பேன் போன்ற இன்னோரன்னப பல சிறுகதைத் தொகுதிகளையும். அங்கே இப்ப என்ன நேரம்? கடிகாரம் அமைதியாக எண்ணிக் கொண்டிருக்கிறது, வியத்தலும் இலமே, அமெரிக்க உளவாளி, ஒன்றுக்கும் உதவாதவன் போன்ற கட்டுரைத் தொகுப்புக்களையும் தமிழ் உலகிற்குத் தந்த அ. முத்துலிங்கத்தின் படைப்புலகம் மிக விசித்திரமானது. ஒரு படைப்பு வெறுமனே அதன் உள்ளடக்கத்தில் வைத்து பார்க்கப்படுவதில்லை. அப்படைப்பின் மூலகர்த்தா, அவர் கொண்டிருக்கின்ற கொள்கை, கோட்பாட்டுச் சூழல், பின்புலம் போன்றவற்றினை அடிப் படையாகக் கொண்டே ஒரு இலக்கியப் பிரதி நோக்கப்படுகிறது. காத்திரமிக்க படைப்பு வாசக மனதில் நிலையான பொக்கிஷமாக இருக்கின்ற போது அந்தப் படைப்போடு சேர்த்து அந்தப் படைப்பாளனும் வாழ்த்தப்படுகிறான். இதுதான் அப்படைப்பிற்கு கிடைக்கின்ற திருப்தி எனலாம். அ. முத்துலிங்கத்தின் படைப்புலகத்தினைப் பொறுத்தவரை அவரின் கதைகள் காலத்தின் மனிதர்களை உணர்த்தி நிற்கின்ற, வாழ்வியலை எள்ளி நகையாடுகின்ற வாசனையின் பிரபதிபலிப்பாகும்.

தனது படைப்புகளின் மூலம் ஏராளமான விருதுகளை தன் வசப்படுத்தியவர் அ. முத்துலிங்கம். எவ்வாறு ஒரு கதை சொல்லியை அடையாளம் காணலாம், அவனுடைய எழுத்துக்களை கதைகளின் பக்கம் எவ்வாறு உள்வாங்கலாம், அவனுடைய கதைகளின் அரசியலினை எப்படி புரிந்து கொள்வது போன்ற ஏராளமான கேள்விகள் ஒரு வாசகனை உருவாக்குகின்றன. நிலவிலிருந்தும், காற்றிலிருந்தும், தான் நுகர்கின்ற எல்லாப் பொருட்களின் மீதும் ஒரு கதை சொல்லி கவனம் பெறத் துவங்குகிறான். அவைகளை கதைகளாக பிரகடனப்படுத்துகிறான். கதைகளின் பிறப்பு நிகழ்ந்ததன் பின்னர் வாசகனின் பார்வையும், உரையாடலும் ஒரு கதை சொல்லிக்கான அங்கீகார இருப்பிடத்தினை வழங்குகின்றன. அவ்வகை இருப்பின் சொந்தக்காரனே அ. முத்துலிங்கம்.




# தத்துவசாரம்

புத்தன் யஷோதரையை காதலித்தான் என்று கூற முடியாது. அவன் போதி மரக்கிளைகளை காதலித்தான். அவற்றின் மீது மிகுந்த கரிசனை கொண்டிருந்தான். என்றாவது ஒரு நாள்; கரைந்து விடுவதாகவும் கூறியிருந்தான். யஷோதரை இனப்படுகொலை செய்யப்பட்ட படைப்பாகவே மாறியிருந்தாள். அவள் இறந்தபோது அவள் மார்பில் காவி உடையின் பீய்ந்த துண்டுகள் தூங்கிக் கொண்டிருந்தன. அவள் எதுவுமற்றுப் போயிருந்தாள் என யாராலும் கூற முடியாது. யஷோதரை நிலையாமை வகையைச் சார்ந்தவள். எப்படியான உணர்வுகளிலிருந்தும் தப்பித்துக் கொள்ளக் கூடிய ஒரு தத்துவசாரத்தை உன்னால் மொழிய முடியுமா? என ஒரு முறை புத்தனிடம் கேட்டாள். அப்படியான ஒரு தத்துவசாரத்தை உருவாக்குவதாக இருப்பின் எவ்வாறான பெயரினை வைக்கலாம்? என்று புத்தன் கேட்டான். அவள் நீண்ட நேரம் யோசித்தாள். அவளைக் காத்திருக்கும் பொழுதுகளில் பச்சைத் தாவரங்களை உற்றுப் பார்த்தபடி இருப்பான் புத்தன். நீண்ட நேரம் கழித்து வந்தவள் யோசிப்பவர்கள் சிந்தனையினை துவம்சம் செய்பவர்கள் என்றாள். புத்தன் பார்த்துக் கொண்டிருந்த பச்சைகள் மீது ஒரு தத்துவசாரம் தொங்கிக் கொண்டிருந்தது. அதன் வடிவமைப்பு புத்தனைக் கவர்ந்திருந்தது. காதலில் சரிந்து போன ஒரு கண்ணழகி பற்றி அந்த தத்துவசாரம் பேசியிருக்க வேண்டும். அல்லது ஒரு நதியினைப் பற்றி, நத்தைகளைப் பற்றி, போதி மரத்தினைப் பற்றி பேசியிருக்க வேண்டும்.



எதனையுமே பேசாத ஒரு வெற்றுபசாரமாக அது இருக்க முடியுமா? அதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா? வெற்றுபசாரங்களில் புத்தனின் பச்சைத் தாவர சிந்தனைகளை விதைக்க முடியுமா? பிறகு அது எப்படி வளரும்? பச்சையாகவா? தனது சிந்தனையின் நிறம் பச்சையா? அங்கு சிந்தனையினைப் பார்க்க முடியுமா? புத்தனது கண்கள் தானாகவே பச்சையைப் பார்த்தன. அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான். ஏன் ராகுலன் ஒரு தத்துவசாரமாக இருக்க முடியாது என சிந்தித்தான். சீடர்களின் பெரும் வழிப்பாதை பெற்ற ஞானத்தின் திருவடிகளை ராகுலனில் அவன் கண்டிருக்க முடியும். யஷோதரை அவசரமாக புறப்பட்டாள். நடுராத்திரியில் தொலைத்துக் கொண்ட புத்தனின் வருகையினை நினைத்து குதூகலிக்க அவளுக்கு நேரமில்லை. அவளுக்கு ராகுலன் துணையாக நின்றான். புத்தனிடம் கேட்பதற்கு அவளிடம் ஏராளமான கேள்விகள் இருந்தன, எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டாள். எல்லாக் கேள்விகளுக்கும் புத்தனிடத்தில் பதில் இருக்கவில்லை. பதில் சொல்லும் நிலையினை புத்தன் மீறியிருந்தான். அவனைச் சுற்றி ஏராளமான சீடர்கள் இருந்தனர். போதி மரம் இருந்தது. அவன் பேசிக் கொண்டே இருந்தான். யஷோதரைக்கு எந்தச் சந்தர்ப்பங்களும் வழங்கப்படவில்லை. அதற்கான நேரம் புத்தனிடம் இருக்கவில்லை.

# மாற்று சினிமாவின் முகம் – எலியா ஹசன்

அமெரிக்க இயக்குனரான எலியா ஹசன் மிகப் பிரபலமான இயக்குனர். இவரது **On the water front** சினிமா வரலாற்றில் மிக முக்கியமான திரைப்படமாகும். குற்றங்களின் வசிப்பிடமான மனிதனுக்கு பின்னால் இருக்கின்ற ஒரு கதையினையும், குற்றங்கள் முடிவடையும் வெளிப்பாடுகளையும் கட்டுடைத்த இத்திரைப்படம் மனித வாழ்வின் உள்ளடக்கங்களை பேசிய மிக நுட்பமான படைப்பாகும். துறைமுகப் பகுதியினை தனது ஆக்கிரமிப்பிற்குள் வைத்து பல குற்றங்களைச் செய்து வரும் ஒரு மாபியா வில்லனை ஒரு குத்துச் சண்டை வீரன் எதிர்த்து நிற்கின்ற கதையமைப்பினை தனது வீரியமான ஒளிப்பதிவின் மூலமும், தொடரான வார்த்தைகளின் மூலமும் படமாக்கியிருக்கிறார் இயக்குநர் எலியா ஹசன். ஒரு திரைப்படம் எவ்வகையான போக்கினைக் கொண்டிருப்பினும் அது இரசிகரின் மனதினை வசீகரிக்காவிட்டால் அப்படைப்பு போலியானதாகிவிடும். சினிமா என்பது வெறுமையாக ஒரு விடயத்தினை சொல்லக் கூடியது அல்ல, அம்மாதிரியான படைப்புக்கள் சிறந்த சினிமாவிற்கான அடையாளமாகவும் இருக்க முடியாது. திரைப்படங்கள் எல்லாம் மனித உணர்வுகளை ஏதோ ஒரு வகையில் பேசக் கூடியவைதான். இத்திரைப்படமும் உறவுகளுக்கிடையிலான பரிமாணத்தை காட்சிப்படுத்தியிருக்கிறது. குற்றங்கள் புரியும் ஜோனியினை எதிர்த்துப் போராடும் நடிகர் மார்லன் பிராண்டோவின் அண்ணன் ஜோனியின் வழக்கறிஞனாக வேலை பார்க்கிறான். ஜோனி செய்கின்ற ஒரு கொலையினை மார்லன் பிராண்டோ காண்பதிலிருந்து இத்திரைப்படத்தின் கதை வேறொரு பக்கம் திரிபடைவதினை நாம் அவதானிக்கலாம். ஒரு சினிமா காட்சியமைப்பினூடாக மக்களிடம் செய்தி சொல்ல வேண்டும் எனும் கட்டமைப்பினை நிறுவிய ஒரு அற்புதமான படைப்பே இத்திரைப்படம். இத்திரைப்படத்தில் இசையினை மிகத் துல்லியமாக அவதானிக்கலாம். மரபு ரீதியாக பின்பற்றி வந்த சினிமா போக்கினை புதிய அனுமானங்களுடன் மாற்றியமைத்த படைப்பு எனில் அது **On the water front**

இத்திரைப்படத்தின் இயக்குனரான எலியா ஹசன் 1998ஆம் ஆண்டு ஒஸ்காரில் வாழ்நாள் சாதனை படைத்த இயக்குனராவார். இத்திரைப்படத்தில் நடித்த பலர் தங்களுக்கான இருப்பினை சினிமாவில் தக்க வைத்துக் கொண்டனர். நாயகனாக நடித்த மார்லினுக்கு இத்திரைப்படம் பெரும் பெயரினை வாங்கிக் கொடுத்தது.

சிறந்த நடிகர், கலை இயக்கம், ஒளிப்பதிவு, இயக்கம், படத்தொகுப்பு, சிறந்த திரைப்படம் என ஆறு ஒஸ்கார் விருதுகளை தன் வசப்படுத்தியது இத்திரைப்படம். படத்தினை நகர்த்திச் செல்கின்ற மிருதுவான இசைச் செருகல், எவ்வித தடையுமின்றி சினிமாவின் ஓட்டத்தினை இரசிப்பதற்கான மந்திரமாகும். இத்திரைப்படத்தில் இடம்பெற்ற மிக முக்கியமான விடயம் அது கையாண்ட மொழியாகும். மிக அற்புதமான உரையாடல்களினை இத்திரைப்படத்தில் தரிசிக்க முடியும்.



# தமிழர் மனங்களிலுள்ள வடுக்களை அரசாங்கம் போக்க வேண்டும்

யுத்தத்தால் அரசாங்கத்தின் கைகளில் இரத்தக் கறை படிந்திருப்பதாக வலியுறுத்தியுள்ள வடக்கின் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்தை அந்த கறைகளை போக்குவதற்காகவும் பயன்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

“இலங்கை அரசாங்கம் நல்லிணக்கம் தொடர்பிலான உரையாடலை அதிகம் பேசிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தற்போது “கிளீன் ஸ்ரீலங்கா“ என்ற புதிய செயற்றிட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்த அரசின் கைகள் முழுமையாக இனப்படுகொலையின் காரணமான, ஒரு இனத்தின் மீது வலிந்து திணித்த அந்த போரின் காரணமாக, இரக்கத் கறை படிந்திருக்கிறது.

அதனை அந்த அரசு சுத்தம் செய்வதற்கு முன்வர வேண்டுமென இந்த மாணவர் சமூகமாக நாங்கள் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.”

“கிளீன் ஸ்ரீலங்கா“ திட்டத்தின் மூலம் மக்கள் மனதில் உள்ள வடுக்கள் மற்றும் ரணங்களைக் குறைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்கிறார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ். சிவகஜன்.

“கிளீன் ஸ்ரீலங்கா எனப்படுவது தனியே சுத்தம், சுகாதாரம், தெருக்களை சுத்தப்படுத்துகிறோம் என்பதில்



மாத்திரம் இந்த அரசின் இலக்குகள் அமைந்துவிடக்கூடாது. அது எப்பொழுதுமே மக்களின் மனங்களில் உள்ள ஆதார வடுக்களை, ரணங்களை தனிப்பதாகவே இருக்க வேண்டும். அதுவும் இந்த நாட்டை தூய்மைப்படுத்தக்கூடிய ஒரு செயல்தான்.”

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும், புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டதன் பின்னர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் போராளிகளையும் விடுவிக்குமாறு கோரி ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ள மனுவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் கையொப்பத்தைப் பெற்று அதனை போராளிகளின் நலன்புரிச் சங்கத்திடம் கையளித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மையினருக்கு எதிரான சட்டமென உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடுமையாக விமர்சிக்கப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறும், அந்த சட்டத்தை முழுயையாக நீக்கக் கோரியும் வட மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் போராளிகள் நலன்புரிச் சங்கம் முன்னெடுக்கும் கையெழுத்துப் பிரசாரத்துடன் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கையெழுத்திட்டிருந்தனர்.

இனப்படுகொலை என்ற போர்க்குற்றத்திற்கு இந்த அரசே பொறுப்பு எனக் குற்றம் சாட்டிய மாணவர் சங்கத் தலைவர், போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் மனங்களில் உள்ள வடுக்கள் , கவலையை போக்க அரசும் முன்வர வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.

“இந்த மக்களின் மனங்களிலேயே கண்ணீரும், கவலைகளும் தேங்கி மக்களின் மனதிலும் அழுக்கு படிந்துள்ளது. அதனையும் சுத்தம் செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். இந்த அரசின் மீது படிந்துள்ள இனப்படுகொலை போர்க்குற்றத்திற்கு இந்த அரசு பொறுப்புச்சொல்ல வேண்டும்.” 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் “கிளீன் ஸ்ரீலங்கா” திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, இந்நிகழ்ச்சியில் மக்களை ஒன்று திரட்டும் வகையில், கிராமங்கள் வரை கிளீன் ஸ்ரீலங்கா சபைகளை அமைக்க எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

புதிய இலங்கை தேசத்தையும் நாட்டையும் கட்டியெழுப்புவதற்காக கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்திற்காக தனியான நிதியத்தை நிறுவுவதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டிருந்தார்.

- பார்த்தீபன்

## திரௌபதியம்மன் ஆலய பிரமோற்சவ தேர்த்திருவிழா இன்று



(க.மகாதேவன்)

வரலாற்று சிறப்பு வாய்ந்த புத்தளம் உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை(10) தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

கடந்த 2ந்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இவ்விழாவில் 12நாட்கள் திருவிழா இடம்பெறுவது முக்கியமான தாகும்.வெள்ளிக் கிழமை (10) அதிகாலை 3 மணிக்கு ஸ்நபன அபிஷேகம் ,விஷேட பூஜை அத்துடன் அதிகாலை 5 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனம் காலை 8.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை,அதனைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம் வந்து இரதத்தில் எழுந்தருளும் காட்சி இடம்பெறும்.

# தமிழரின் பாரம்பரிய நிலங்களை கையகப்படுத்தும் தொல்லியல்

( ஏ.எச் . ஹஸ்பர் )

தொல்பொருள் துறையானது தமிழ் மக்கள் சில நூற்றாண்டு காலமாக விவசாயம் செய்து வருகின்ற, விவசாய நிலங்கள். இந்த நிலங்கள் தொல்பொருள் இடங்களாக அறிவித்து கையகப்படுத்தி வருகின்றதென இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று (09)கூடியது. இதன் போது தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் உரையாற்றுகையில்:

இந்த ஆண்டு தொடங்கி பத்து நாட்கள் கூட முடிவடையாத நிலையில், தொல்லியல் துறையானது கடந்த ஆறாம் திகதி மாலை திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் வட்டவான் கிராமசேவர் பிரிவில் அடங்கும் 224 விவசாயிகளுக்கு சொந்தமான 380 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்பயிரோடு கூடிய



விவசாய நிலத்தை தமது தொல்லியல் பகுதி என அறிவித்துள்ளது.

அதேபோன்று குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் குச்சவெளி கிராம சேவையாளர் பிரிவில், 1985 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே விவசாயிகள் பயன்படுத்தி வந்த நெற்களஞ்சியம் மற்றும் சந்தைப் பகுதியை தொல்லியல்துறை தொல்பொருள் பகுதி என அறிவித்துள்ளது.

இதற்கு முன்னரும் தொல்லியல் துறையானது, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள திரியாய் கிராம சேவையாளர் பிரிவில் உள்ளடங்கும் பிரித்தானியர்களால் வழங்கப்பட்ட உறுதிகளைக் கொண்ட, 150 ஆண்டு காலமாக தமிழ் மக்கள் விவசாயம் செய்து வருகின்ற, அண்ணளவாக ஆயிரம் ஏக்கர் நிலத்தினை விவசாயம் செய்ய விடாமல் எல்லைக் கற்களை போட்டு பிடித்து வைத்துள்ளது.

இது மட்டுமல்லாமல் இதனை விடவும், மேலும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்கும் தென்னைமரபுஅடி, புல்மோட்டை, திரியாய், குச்சவெளி, ஜாயா நகர், கும்புறுப்பிட்டி, நிலாவெளி, பெரியகுளம் முதலிய கிராமசேவை பிரிவுகளை உள்ளடக்கிய 1994 ஏக்கர் நிலத்தை எல்லைக்கற்களை இட்டு பிடித்து வைத்துள்ளது.

## ஜம்இய்யதுல் உலமாவின் புத்தளம் நகரக் கிளைக்கு பைசல் எம்பி விஜயம்



( எம்.யூ.எம்.சனூன் )

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா புத்தளம் நகரக் கிளையின் வேண்டுகோளுக்கு இணங்க புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம். பைசல் ஜம்இய்யாவின் காரியாலயத்திற்கு அண்மையில் விஜயமொன்றினை மேற்கொண்டார்.

புத்தளத்துக்கான காதியாரின் தேவைப்பாடு, புத்தளம் தள வைத்தியசாலையினை மேம்படுத்துவதோடு, அங்கு தொல்லைகளை ஏற்படுத்தும் தெரு நாய்களை அகற்றுதல்,புத்தளம் திறந்த பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடத்தின் தேவைப்பாடுகள், புத்தளம் நகரில் புதிய தொழில்நுட்ப கல்லூரியின் தேவைப்பாடு, வடிகான் அமைப்புகளை சீர் செய்தல் போன்ற முன்மொழிவுகள் நாடாளுமன்ற உறுப்பிர் பைசலிடம் முன் வைக்கப்பட்டன.

இதன் போது ஜம்இய்யாவின் உறுப்பி னர்களால் நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் பொன்னாடை போர்த்தி நினைவு சின்னம் வழங்கிய கௌரவிக்கப்பட்டார்.

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்திய அரசின் உலர் உணவுப் பொதிகள்

இந்திய அரசின் உலர் உணவுப் பொதிகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தை வந்தடைந்துள்ளன.



இந்தியா இலங்கை 75 வருட ஆண்டு கால இராஜதந்திர உறவை முன்னிட்டு ‘இந்தியாவிலிருந்து அன் புடனும் அக்கறையுடனும்’ எனும் தொனிப் பொருளில் கடந்த மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கப்படவுள்ளன. அதற்காகவே குறித்த உலர் உணவுப் பொதிகள் மாவட்ட செயலகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரனின் வேண்டு கோளுக்கு அமைவாக 750 உலர் உணவுப் பொதிகள் நேற்று மாவட்ட செயலத்திற்கு அனுப்பிவைத்துள்ளனர். பெறுமதியான இவ் உலர் உணவு பொதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கையளிக்கப்படவுள்ளது.இந் நிகழ்வில் பிரதம கணக்காளர் திருமதி காயத்திரி ரமேஸ், கணக்காளர் எம்.வினோத் உள் ளிட்ட உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மின் கட்டண திருத்தம்; கிழக்கில் மக்கள் கருத்தறியும் அமர்வு





(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மின் கட்டணத் திருத்தம் தொடர்பாக கிழக்கில் மக்கள் கருத்தறியும் அமர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள மின் கட்டணத் திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் கருத்தறியும் அமர்வு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் பேராசிரியர் லலித் சந்திரலால் தலைமையில் மட்டக்களப்பு பழைய மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம்பெற்றது.



அவ் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க, பிரதிப்பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலந்த சபுமானகே, செயலாளர் நதிஜா வரப்பிட்டிய, உட்பட இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகள் இந்த அமர்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கருத்தறியும் அமர்வில், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், வைத்தியர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், துறைசார் வல்லுநர்கள் மின் பாவனையாளர்கள் என சுமார் 43 பேர் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை முன்வைத்தனர்.

## உள்ளூராட்சி மன்றங்களுக்கான

# ஆளணி தட்டுப்பாடுகளை நிவர்த்திக்கவும்



### நாடாளுமன்றில் அஷ்ரப் தாஹிர் வேண்டுகோள்

(திகாமடுல்ல நிருபர்)

உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், தொழிலாளிகள், சுகாதார தொழிலாளிகள் போன்ற ஆளணி தட்டுப்பாடுகளை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் கவனத்திலெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் (08) நாடாளுமன்றில் உள்ளூராட்சி அமைச்சரிடம் வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்.

பிரதேச செயலகங்களில் அறவீடு செய்யப்பட்டு வரும் வாகன வருமான வரி கட்டணங்களில் ஒரு பகுதியளவேனும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் கேட்டுக் கொண்டார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தொடர்ந்து உரையாற்றுகையில் உள்ளூராட்சி மன்றங்களினால் வீதிகள், வடிகான்கள், பொதுச் சந்தைகள், களியாட்ட இடங்கள், மைதானங்கள், மயானங்கள், நூலகங்கள், திண்மக் கழிவகற்றல் போன்ற பல்வேறுபட்ட சேவைகளை மக்களுக்காக வழங்கி வருகின்றன.

அதற்கு மேலதிகமாக அண்மையில் வெளியிடப்பட்ட சுற்று நிருபம் ஒன்றில் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான சம்பள கொடுப்பனவில் 40 வீதத்தினை சபையின் நிதியிலிருந்து வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அறியமுடிகிறது.

இவ்வாறான நிலையில் முத்திரை வரி, நீதிமன்ற தண்டப்பணங்கள், சொத்துக்களுக்கான வரிகள் போன்றவற்றினைக் கொண்டே உள்ளூராட்சி மன்றங்கள் வருமானங்களை மீட்டிக் கொள்கின்றன.

எனவே,அதேபோன்று கடந்த காலங்களில் வீதிகளில் பயன்பாட்டில் இருந்த மாட்டு வண்டிக்கான வரி, துவிச்சக்கர வண்டிக்கான வரிகள் போன்றவை அறவீடு செய்யப்பட்டு வந்திருந்தாலும் தற்காலத்தில் அவற்றின் பாவனை குறைவடைந்துள்ளமையால் அவ்வரி அறவீடு நடைமுறையில்லை.

ஆகையால் பிரதேச செயலகங்களில் அறவீடு செய்யப்பட்டு வருகின்ற வாகன வருமான வரி கட்டணங்களை பங்கீட்டு வரி பட்டியலில் இணைத்து அதில் ஒரு பகுதியளவேனும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கினால் அதனுடைய சேவைகளை வினைத்திறன் மிக்கதாக கொண்டு செல்ல முடியுமென குறிப்பிட்டார்.

மேலும் கடந்த 13 வருடங்கள் உள்ளூராட்சி மன்றமொன்றின் தலைவராக செயற்பட்டு வந்த அனுபவத்தில், உள்ளூராட்சி நிறுவனங்களை நிர்வகிக்கும் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்கள் பல நிர்வாக அசௌகரியங்களை எதிர்கொள்கின்றார்கள்.

## றோஹிங்கிய முஸ்லிம்கள்:

# அரசின் நிலைப்பாட்டில் மீள் பரிசீலனை அவசியம்

(பேரின்பராஜா சபேஷ்)

மியன்மாரிலிருந்து புகலிடம் கோரி இலங்கையில் தஞ்சமடைந்த றோஹிங்கிய முஸ்லிம்கள் விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமது நிலைப்பாட்டினை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நழீம் தெரிவித்துள்ளார்.

இனவாதத்தினை முதலீடு செய்து ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷகளின் ஆட்சி காலத்தில் மியன்மாரிலிருந்து தஞ்சம் கோரி வந்த றோஹிங்கிய முஸ்லிம்களுக்கு இலங்கையில் புகலிடமளிக்கப்பட்ட வரலாற்றினை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு நினைவுபடுத்த விரும்புகிறேன் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு ஏறாவூர் பாத்திமா பாலர் பாடசாலையின் 2024ஆம் ஆண்டிற்கான விடுகை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் ஏறாவூர் அல் அஸ்கர் உயர்தர பெண்கள் பாடசாலையில் சபா மண்டபத்தில் செவ்வாய்கிழமை (07) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

பாலர் பாடசாலையின் அதிபர் எம்.பி.எம்.பாத்திமா பஸ்மியா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஒருங்கிணைப்பு செயலாளருமான எம்.எஸ் நழீம், முன்பள்ளி உதவிக் கல்வி பணிப்பாளர் ஏ.எல்.பாரூக், அல் அஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையின் அதிபர் எஸ். எம்.நவாஸ் மட்டக்களப்பு மத்தி அலுவலகத்தின் ஆசிரியர்



ஆலோசகர் எச்.எம்.ஏ.மாஜி, ஏறாவூர் நகர சபை முன்னாள் தவிசாளர் எம். ஐ .எம்.தஸ்லிம், முன்னாள் நகர சபை உறுப்பினரும் இமாம் ஹஸ்ஸாலி பவுண்டேஸன் ஏ.ஆர்.எம்.பெறோஸ், முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினரும் மீராகேணி தபால் அலுவலக அதிபமான ஏ.நஸீர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அதிதிகளினால் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## சாய்ந்தமருதில்

# குர்ஆன் மத்ரஸா மீள ஆரம்பம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இயங்கிவந்த அல் - குர்ஆன் மத்ரஸா நாட்டில் ஏற்பட்ட கொரோனா நோய் தாக்கம் காரணமாக மூடப்பட்டது. அம்மத்ரஸாவை நாளை 11ஆம் திகதி சனிக்கிழமை முதல் மீள ஆரம்பம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இம் மத்ரஸாவின் பொறுப்பாளராக தகுதிபெற்ற எஸ். அஜ்மல் மௌலவி கடமையாற்றவுள்ளதாகவும் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் பிரதித் தலைவர் எம்.எம்.எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

பதிவுக் கட்டணமோ, மாதாந்த கட்டணமோ என எந்தவிதக் கட்டணமும் அறவிடப்படாது முற்றிலும் இலவசமாக இம்மத்ரஸா நடாத்தப்படவுள்ளது.

தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க விரும்புபவர்கள் சாய்ந்த மருது ஜும்ஆப் பள்ளிவாசல் காரியாலயத்தில் விண்ணப் பப்படிவத்தைப் பெற்று, அதனைப் பூரணப்படுத்தி, நாளை 11 ஆம் திகதி சனிக் கிழமைக்கு முன்னர் ஒப் படைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# தேசிய இலக்கிய விருது



(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

வைத்திய அதிகாரியும் எழுத்தாளரும் இலக்கியத்துக்கான விருதுகள் பெற்ற இலக்கிய ஆர்வலருமான ஜலீலாவின் மகளும் தேசிய இலக்கிய விருதைத் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஏறாவூர் அறபா வித்தியாலய மாணவி எம். பாத்திமா மஹ்தியா, பிரதேச,மாவட்ட,தேசிய மட்டங்களில் நடைபெற்ற தேசிய இலக்கியப் போட்டித் தொடர்களின் இறுதிச்சுற்றில் வெற்றியடைந்து விருது பெற்றுள்ளார்.

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போது கனிஷ்ட பிரிவு கவிதை ஆக்கத்தில் தேசிய ரீதியாக முன்றாம் இடத்தைப் பெற்றமைக்காக பாத்திமா மஹ்தியாவிற்கு தனக்கான விருது, பதக்கம், சான்றிதழ் ஆகியவை வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பாத்திமா மஹ்தியாவின் தந்தை எஸ்.எச். முஸம்மில் மட்டக்களப்பு கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளராகக் கடமையாற்றுகிறார்.

# திருமலை அரசாங்க அதிபர் கடமை பொறுப்பேற்பு

(கியாஸ் ஷாபி, ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார, நேற்று (9) தனது கடமைகளை சர்வமத ஆசிர்வாதத்துடன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந் நிகழ்வு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. 2003.09.01 ஆம் திகதி இலங்கை நிருவாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட இவர், தெஹியத்தகண்டிய உதவி பிரதேச செயலாளர், பிரதேச செயலாளர், மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சின் உதவி செயலாளர், மத்திய மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர்,



மத்திய மாகாண விளையாட்டு திணைக்கள பணிப்பாளர்(பதில் கடமை), ஹதரலியத்த மற்றும் தும்பன பிரதேச செயலாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

அரசாங்க அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட முன்னர், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக இவர் கடமையாற்றியுள்ளார்.

திருகோணமலை மாவட்டச் செயலாளராக கடமையாற்றிய சாமிந்த ஹெட்டியாராச்சி 2025-01-01 இலிருந்து ஓய்வுதிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து, இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# அலுவலகத்தை உடைத்து திருட்டு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாஞ்சோலை கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள பல்தேவை கட்டிட அலுவலகத்தை உடைத்து அங்கிருந்த உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன.

இந்த திருட்டுச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த அலுவல அறை உடைக்கப்பட்டு அங்கிருந்த மின் விசிறி, தண்ணீர் பம்பி, அலுவலக எழுது பொருட்களும் போன்ற பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாவடிப்பள்ளி அனர்த்தம்: களத்தில் பணியாற்றியோருக்கு கௌரவம்



(சுலைமான் றாபி)

வெள்ள அனர்த்தத்தின்போது மாவடிப்பள்ளி - காரைதீவு உழவு இயந்திரம் கவிழ்ந்த சம்பவத்தின் போது, களப்பணி செய்த சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு ஜனாஸா மக்கள் பேரவையை, நிந்தவூர் அல் பஷாஹிர் சமூக சேவைகள் அமைப்பினர் செவ்வாய்க்கிழமை நேரில் சென்று கௌரவித்துள்ளனர்.

இந்த நிகழ்வானது சமூக சேவைகள் அமைப்பின் செயலாளரும், நிந்தவூர் பிர்தௌஸ் ஜும்ஆ பள்ளிவாசலின் பிரதம இமாமுமான மௌலவி ஏ.பி. எம் சிம்ஸிலின் வழிநடாத் தலின் கீழ் நடைபெற்றது.

கடந்த அனர்த்தத்தில் இரண்டு ஜனாஸா நலன்புரிப் பேரவை உறுப்பினர்கள், எவ்வித எதிர்பார்ப்புகளும் இன்றி களப்பணி செய்ததனை நினைவுகூர்ந்த அல்-பசாஹிர் சமூக சேவை அமைப்பினர், தங்களது ஊர் மக்கள் சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து கௌரவத்தினை வழங்கியுள்ளனர்.

இதன்போது சமூக சேவை அமைப்பின் சார்பாக சட்டத்தரணி ஏ.எம் நசீல் அமைப்பின் தலைவர் எம் ஹம்சா, செயலாளர் ஏ.பி. எம்.சிம்ஸில், அமைப்பின் செயற்பாட்டாளர்களான மௌலவி எம். ஜலீல், அல்ஹாபிழ் எம்.இஸ்ஹாக், கலாசார உத்தியோகத்தர் முஹம்மட் பர்ஹான், விரிவுரையாளர் சுலைமான் நாசிறூன், சாய்ந்த மருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் தலைவர் அஸ்வர் அப்துல் சலாம், மாளிகைக்காடு ஜனாஸா நலம்புரி சங்கத்தின் தலைவர் ஏ.எம். தஸ்மீன் உள்ளிட்ட ஜனாஸா நலம்புரி சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில் நிந்தவூர் அல் - பசாஹிர் சமூக சேவைகள் அமைப்பினரால் ஞாபகம் சின்னம் மற்றும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

# சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம்



(எஸ்.கார்த்திகேசு)

நாட்டில் வாழும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை பொருளாதாரத்தில் வலுவூட்டும் அரசின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கான சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் தொடர்பாக திருக்கோவில் பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்களை தெளிவூட்டும் செயலமர்வு நேற்று இடம்பெற்றது.

இச் செயலமர்வானது கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு மற்றும் சமுர்த்தி திணைக்களம் இணைந்து திருக்கோவில் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டு இருந்தது.

இதன்போது நாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் அடையாளப்படுத்தப்பட்டுள்ள சுமார் 15 இலட்சம் குடும்பங்களின் 2025ஆம் ஆண்டு 3 இலட்சம் குடும்பங்களை பொருளாதாரத்தில் வலுப்படுத்தும் நோக்கில் அரசினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ் வேலைத்திட்டம் தொடர்பாக கள உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டல்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இச்செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

அந்தவகையில் திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் 22 கிராம சேவையாளர் பிரிவில் வாழும் சுமார் 3300 குடும்பங்களில் 778 குடும்பங்களை அடையாளப்படுத்தி சுயதொழில் ஊக்குவிப்புக்களை வழங்கி இவ் வருட நிறைவுக்குள் பொருளாதாரத்தில் வலுப்படுத்துவதற்கான அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இச் செயலமர்வில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.நிருபா உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா சமுர்த்தி தலைமை முகாமையாளர் வி.அரசரெத்தினம் வளவாளர் எம்.ஏ.நஜீம் சமுர்த்தி முகாமையாளர் கிராம மட்ட களப்பணி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

## மன்னார் மனித புதைகுழிகள் வழக்கு;

# திருக்கேதீஸ்வர மனித எச்சங்கள்; அறிக்கை சமர்ப்பிப்பு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் சதோச மனித புதைகுழி மற்றும் மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி வழக்கு விசாரணைகள் நேற்று வியாழக்கிழமை (9) மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன் போது பாதிக்கப்பட்டோர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்....





பாதிக்கப்பட்டோர் சார்பில் மன்றில் சட்டத்தரணிகளான வி.எஸ்.நிரஞ்சன், ரனித்தா ஞானராஜ் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் சார்பாக சட்டத்தரணி புராதணி சிவலிங்கம் ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர்.

யாழ் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் செல்லையா பிரணவன் , மன்னார் பொலிஸார் ஆகியோர் மன்றில் இருந்தனர்.

இதன் போது ஏற்கனவே அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் சட்ட வைத்திய அதிகாரியினால் கையளிக்கப்பட்டன.

76 இலக்கம் தொடக்கம் 156 வரையிலான 80 பெட்டிகள் சட்ட வைத்திய அதிகாரியிடம் மேலதிக பகுப்பாய்விற்கு மன்னார் நீதவான் நீதி மன்றத்தினால் கையளிக்கப்பட்டது.

மிகுதி 75 எலும்புக்கூட்டு பெட்டிகள் இன்று தினம் வெள்ளிக்கிழமை (10) கையளிக்கப்படும். இவை பகுப்பாய்வு செய்து மேலதிக அறிக்கைகள் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளனர்.

கையளிக்கப்பட்டுள்ள "சதோச" மனித புதைகுழி எச்சங்கள் சட்ட வைத்திய அதிகாரியினால் இறப்புக்கான காரணம்,வயது,பால் நிலை போன்ற விடயங்களையும் இறப்பு ஏற்பட்டமைக்கான காரணங்களும் மன்றில் சமர்பிக்கப்பட உள்ளது.

இது தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையும் சில தினங்களில் மன்றில் தாக்கல் செய்யப்பட உள்ளது.

மன்னார் சதோச மனித புதைகுழி வழக்கு விசாரணை இன்று (10) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி வழக்கு விசாரணை இடம்பெற்றது.இதன்போது கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி களினால் ஏற்கனவே பகுப்பாய்வு செய்யப்பட்ட 81 மனித எச்சங்களில் 27 மனித மச்சங்களுக்கான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மரணத்திற்கான காரணம்,வயது,பால் நிலை போன்ற காரணங்கள் குறித்த 27 மனித உடலங்களுக்கான அறிக்கைகள் மன்றில் கையளிக்கப்பட்டுள்ளது.

மிகுதி மனித எச்சங்களுக்கான அறிக்கை 6 மாத காலத்தில் மன்றில் கையளிப்பதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதி விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடமராட்சி கிழக்கில் 20 மீன்பிடி படகு வழுங்கல்

**( பு.கஜிந்தன் )**

வடமராட்சி கிழக்கு தாளையடி நன்னீர் திட்ட நிறுவனத்தால் 40 பயனாளிகளுக்கு



மீன்பிடி படகுகள் வழங்கப்படவுள்ளன. இதில் நேற்று தினம் (9) முதல் கட்டமாக 20 பயனாளிகளுக்கு படகுகள் வழங்கி வைக்கப்பட்டன.வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்திற்குட்பட்ட துணை சங்கங்களின் 20 பயனாளிகளுக்கு சமாச தலைவர் த.தங்கரூபனால் தாளையடி நன்னீர் திட்ட அலுவலகத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டது.

40 படகுகளுக்குமான இயந்திரங்கள் இன்னும் சில நாட்களில் தாளையடி நன்னீர் திட்ட அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன. வருடங்களுக்குள் கையளிக்கப்பட்ட படகு மற்றும் இயந்திரத்தைவிற்பனை செய்தால் பறிமுதல் செய்யப்படு வதுடன் சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்ப டுமென சமாச தலைவர் தங்கரூபன் தெரிவித்துள்ளார்.



வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் கீழ் இயங்கும், கைதடி அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று வியாழக்கிழமை (09)நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது ஆளுநர் வருகை தருவதையும் சிறுவர் இல்லத்தின் தேவைப்பாடுகள் குறித்து இல்லத்தை நடத்திவரும் வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் ஆளுநருக்கு விளக்கமளிப்பதையும் படங்களில் காணலாம். **(படங்கள்: கரவெட்டி நிருபர் ஆ நரேன்)**

# ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு எதிர்காலம் இல்லை

**( எம்.ஏ. அமீனுல்லா)**

ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு எதிர்காலம் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட எம்.பி.க்கள் நாட்டை கட்டியெழுப்பத் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொள்கின்றனர் என

விவசாய, காணி , கால்நடை மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கே. டி லால்காந்த தெரிவித்துள்ளார்.

கண்டி கண்ணொருவ பிரதேசத்தில் அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அமைச்சர் லால்காந்த மேலும் கூறியதாவது:

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் கூட்டணியிடமிருந்து, வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த கணிசமானோர் ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்குப் பங்களித்தனர்.

இவர்களில் ஒரு குழுவினர் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியில் வேட்புமனுக்களைக் கோருகின்றனர். ஆகவே, ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு எதிர்காலம் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட எம்.பி.க்கள் நாட்டை கட்டியெழுப்பத் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொள்கின்றனர்.



இன்னும் மூன்று மாதங்களில் உள்ளூட்சித் தேர்தல் வரப்போகிறது என்று தெரிகிறது. முந்தைய நியமனப் பட்டியல்களுக்குப் பதிலாக புதிய நியமனப் பட்டியல்கள் தயாரிக்கப்பட வேண்டும். சில வேட்பாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் இன்னும் சிலர் இறந்துள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

நோய்வாய்ப்பட்டு அரசியலை விட்டவர்களும் உண்டு. மற்றவர்கள் கட்சி மாறியுள்ளனர்.

புதிய நியமனங்களையும் நாங்கள் தயார் செய்ய வேண்டும். நாங்கள் இன்னும் பிரசாரத்தைத் தொடங்கவில்லை. இதற்கான வேட்புமனு தாக்கல் நடந்து வருகிறது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் ஊடகங்கள்

# ரோஹிங்கிய அகதிகள் விவகாரம்; மனிதாபிமான செயற்பாடுகளை முன்னெடுக்கவும்

சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளித்து, மியன்மார் ரோஹிங்கிய அகதிகள் விவகாரத்தில் மனிதாபிமான ரீதியில் செயற்படுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பி னருமான ரிஷாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (09) உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

மியன்மார் ரோஹிங்கிய அகதிகள் முல்லைத்தீவில் கரையொதுங்கி, திருமலையில் வைக்கப்பட்டிருந்தபோது, நான் அவர்களைப் பார்வையிடச் சென்றிருந்தேன். அவர்களுடன் கலந்துரை யாடுவதை பொலிஸார் தடுத்து, எமக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தினர். நான் மீள்குடியேற்ற அமைச்சராக இருந்தபோது. 3 இலட்ச அகதிகளுக்கு, அரசாங்கத்தின் உதவியுடன், பல மாதங்கள் மூன்றுவேளை உணவு வழங்கி பராமரிக்க நடவடிக்கை மேற்கொண்டேன். எனவே, ஒரு மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகை யில், எனக்கு இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டமை மன வருத்தத்தைத் தோற்றுவித்தது. நித்திரைக்குப் பாய்,



தலையணை கூட அந்த மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. பிரதேச செயலாளரின் அனுமதியுடனேயே நான் அங்குச் சென்று, அவர்களுக்குத் தேவையான சில உதவிகளைச் செய்தேன். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, எங்களுடன் இரண்டு தசாப்தகாலமாக இந்த பாராளுமன்றில் இருந்தவர் என்ற வகையில், அவரது நற்பண்புகளைக் கண்டிருக்கின்றோம். அவரது பேச்சு மற்றும் வாக்குறுதிகள் மீது நம்பிக்கைகொண்டுதான், மூவின மக்களும் இந்த அரசாங்கத்தை ஆதரித்தனர். இந்த அகதிகளை மியன்மாருக்கு திருப்பி அனுப்பவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்வாறு எமது நாட்டுக்கு அகதிகள் வருகின்றபோது, சர்வதேச சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். அந்தவகையில், இந்த மியன்மார் அகதிகள் விடயத்திலும் மனிதாபிமான ரீதியில் செயற்படுங்கள்.

எங்கோ சென்ற இந்த அகதிகள், துரதிருஷ்டவசமாக இலங்கையில் கரையொதுங்கியுள்ளனர். எனவே, அவர்களைச் சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் மியன்மாருக்கு திருப்பி அனுப்புவது நியாயமில்லை. அவ்வாறு அனுப்பும் பட்சத்தில், இதைவிடப் பெரிய கொடுமை ஏதும் இருக்காது.

எனவே UNHCR மற்றும் ஐ.நா நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி, அகதிகளைத் தாம் விரும்பும் நாடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நமது நாட்டிலிருந்தும் இவ்வாறு அகதிகளாகச் சென்றவர்கள், வேறு நாடுகளில் மகிழ்ச்சியுடன் நல்ல நிலையில் வாழ்கின்றனர். எனவே, சர்வதேச நடைமுறையை மதித்துச் செயற்படுங்கள்.



மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக் கடவை பரங்கிகமம் பகுதியில் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்ட தமிழர் உணவுப் பண்பாட்டியல் தொடக்க விழா வான அறுவடை விழா நேற்று (9) வியாழன் காலை நடைபெற்றது. இலுப்பை கடவை கமக்கார அமைப்பின் தலைவர் வி. எஸ். சிவகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர். க. கனகேஸ்வரன் கலந்துகொண்டு தமிழர் பாரம்பரிய பண்பாட்டு முறைப்படி முதல் அறுவடையைத் தொடங்கி வைத்தார். **( படங்கள்: மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**




# ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை; 4 இந்தியர்களுக்கு பிணை



காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் (Hardeep Singh Nijjar) கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நான்கு இந்தியப் பிரஜைகளுக்கு கனேடிய நீதிமன்றம் பிணை வழங்கியது.

கரன் பிரார், அமந்தீப் சிங், கமல்ப்ரீத் சிங் மற்றும் கரன்ப்ரீத் சிங் ஆகிய நான்கு இந்தியர்களும் முதல் நிலை கொலை மற்றும் கொலைக்கு சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். வழக்கு மீதான விசாரணை சர்ரே மாகாண நீதிமன்றிடமிருந்து பிரிட்டிஷ் கொலம்பியா உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. அதேநேரம், அடுத்த விசாரணை எதிர்வரும் பெப்ரவரி 11 அன்று திட்டமிடப்பட்டுள்ளது.

ஹர்தீப் நிஜ்ஜார், ஒரு முக்கிய காலிஸ்தான் சார்பு தலைவர், 2023 ஜூன் மாதம் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள சர்ரேயில் படுகொலை செய்யப்பட்டார். இந்த கொலையில் இந்திய அரசுக்கு தொடர்பு இருப்பதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியதை அடுத்து இந்த வழக்கு உலக அளவில் கவனம் பெற்றது. இந்த குற்றச்சாட்டுகளை இந்தியா மறுத்துள்ளது, அவை "ஆதாரமற்றவை" என்றும் கூறியது.

# திறமையான இளைஞர்களை கொண்ட நாடு இந்தியா: பிரதமர் மோடி பெருமிதம்



"இந்தியா திறமையான இளைஞர்களை கொண்ட நாடு. 2047ஆம் ஆண்டுக்குள் நாட்டை வளர்ச்சியடையச் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது" என பிரதமர் மோடி தெரிவித்தார்.

ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் 'பிரவாசி பாரதிய திவாஸ்' மாநாட்டை பிரதமர் மோடி ஆரம்பித்து வைத்தார். உங்களால் என் தலை நிமிர்ந்து நிற்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. நான் சந்தித்த உலகத் தலைவர்கள் அந்நாட்டின் புலம் பெயர்ந்த இந்தியர்களை பாராட்டுகின்றனர். இந்தியர்கள் எங்கு சென்றாலும் அங்குள்ள சமூகத்துடன் ஒத்துப்போகிறார்கள். எதிர்காலம் போரில் இல்லை என்பதை இந்தியா உலகிற்கு எடுத்து சொல்கிறது. நாம் அந்த நாட்டிற்கும், சமூகத்திற்கும் முழுமையான நேர்மையுடன் சேவை செய்கிறோம். இந்தியாவில் ஒவ்வொரு துறையும் வானத்தின் உயரங்களை தொட முன்னேறி வருகிறது. உலக அளவில் இந்தியா தனது கருத்தை வலுவாக முன்வைக்கிறது. 1947ஆம் ஆண்டு இந்தியாவின் சுதந்திரத்தில் புலம் பெயர்ந்தோர் முக்கிய பங்கு வகித்தனர். நம் வாழ்வில் ஜனநாயகம் வேரூன்றியிருக்கிறது. தற்போது 2047ஆம் ஆண்டுற்குள் நாட்டை வளர்ச்சியடையச் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஜி20 கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்தியா திறமையான இளைஞர்களை கொண்ட நாடு ஆகும். இந்திய இளைஞர்கள் வெளிநாடு செல்லும் போதெல்லாம், அவர்கள் திறமைகளுடன் செல்வதை உறுதி செய்ய அரசு முயற்சிக்கிறது. இன்னும் சில நாட்களில் பிரயாக்ராஜில் மகா கும்ப மேளா ஆரம்பிக்கும். எங்கும் மகிழ்ச்சியான சூழல் நிலவுகிறது என பிரதமர் மோடி தெரிவித்தார்.

# மகா கும்பமேளாவில் பங்கேற்கும் பிரெஞ்சு பெண்



உத்தர பிரதேசத்தில் நடைபெறும் மகா கும்பமேளா நிகழ்ச்சியில் பங்கேற்க வந்துள்ள பிரெஞ்சு பெண் பாஸ்கல், ஆன்மாவை சுத்திகரிப்பதற்கான புனித தலம் இது என தெரிவித்துள்ளார்.

உத்தர பிரதேசத்தில் வருகின்ற 13ஆம் திகதி முதல் பெப்ரவரி 26ஆம் திகதி வரை மகா கும்ப மேளா நிகழச்சி நடைபெற உள்ளது. இந்த வருடம் கும்பமேளாவுக்கு 40 கோடி பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. இதனால், 2 இலட்சம் கோடி இந்திய ரூபாய் வருவாய் கிடைக்க கூடும் என முதல் - மந்திரி யோகி ஆதித்ய நாத் தெரிவித்துள்ளார். இந்த கும்பமேளாவானது, இந்தியாவின் பழமையான கலாசாரம் மற்றும் மத பாரம்பரியங்களை உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாற்றும் என தெரிவித்தார்.

இந்த கும்பமேளா நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக பிரான்ஸ் நாட்டில் இருந்து பாஸ்கல் என்ற பெண்மணி உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜ் நகருக்கு வந்துள்ளார். கும்ப மேளாவின் பின்னணி பற்றி எனக்கு நன்றாக தெரியும். பிரயாக்ராஜில் இருப்பதற்காக நான் அதிக மகிழ்ச்சி அடைகிறேன். ஆன்மாவை சுத்திகரிப்பதற்கான புனித தலம் இது என்றார். இந்துத்துவா மற்றும் கடவுள் சிவனின் மீது பிரியம் கொண்டவள் நான். இதற்கு முன்பு பல யோகிகள், சாதுக்கள் மற்றும் இந்து மக்களை சந்தித்திருக்கிறேன். அவர்களை சந்திப்பதற்காக மீண்டும் வந்துள்ளேன் என தெரிவித்தார்.

# கோவையில் ஏ.ஐ தொழில்நுட்ப பூங்கா

## தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் முதலமைச்சர் ஸ்டாலின்




சென்னையில் நடைபெற்ற தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் உரையாற்றிய முதலமைச்சர் ஸ்டாலின் 'கோவையில் ஏ.ஐ இற்கான தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படவுள்ளது. சைபர் பாதுகாப்புக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது" என தெரிவித்தார்.

சென்னை நந்தம்பாக்கத்தில் umagine tn தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை முதலமைச்சர் ஸ்டாலின் ஆரம்பித்து வைத்தார். தமிழகத்தின் நீடித்த, நிலையான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் நாடாகவும் வணிகத்தையும், தொழில்நுட்பத்தையும் ஊக்குவிப்பதில் மற்றவர்களை விட முன்னோடியாகவும் தமிழகம் உள்ளது. மின் வாகன உற்பத்தி மற்றும் வளரும் தொழில் நுட்பங்களில் மாற்றங்களை ஏற்படுத்தும் முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றோம்.

3ஆவது முன்னணி தகவல் தொழில்நுட்ப மாநாட்டில் பங்கேற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. 2,000இற்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறோம். புத்தாக்கம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முதன்மை மாநிலமாக உள்ளது. ஏ.ஐ தொழில்நுட்பத்தால் வேலை வாய்ப்புகள் பெருகத்தான் செய்யும். கோவையில் ஏ.ஐ இற்கான தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படவுள்ளது. சைபர் பாதுகாப்புக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

சிறிய நகரங்களிலும் எல்காட் தொழில்நுட்ப பூங்கா உருவாக்கப்படும். நகரத்தில் மட்டும் வளர்ச்சி குவியக்கூடாது. உண்மையான வளர்ச்சி சமச்சீராக இருக்க வேண்டும். புத்தாக்கம், தொழில் வளர்ச்சியில் தமிழகம் முதன்மை மாநிலமாக உள்ளது. ஆட்சிக்கு வந்தது முதல், இந்த வளர்ச்சியே போதும் என நான் நினைத்தது இல்லை. தமிழகத்துக்கு இன்னும் வளர்ச்சி வேண்டும் என அரசு செயல்பட்டு வருகிறது தமிழ் மென்பொருட்களை உருவாக்க முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். எந்த புதுமை வந்தாலும் அதை முயன்று பார்க்கும் மாநிலமாக தமிழகம் இருக்கிறது. சைபர் செக்யூரிட்டிக்கு முக்கியத்துவம் அளித்து அதற்கான கொள்கை ஏற்படுத்தினோம். 2021இல் 14,927 இ-சேவை மையங்கள் இருந்த நிலையில், 2024ஆம் ஆண்டில் 34,000 ஆக உயர்ந்துள்ளது. சென்னையில் பூங்காக்கள் உள்ளிட்ட இடங்களில் 1,204 இலவச வைபை (WIFI) மையங்களை நிறுவியிருக்கிறோம். டிஜிட்டல் தொழில்நுட்ப குற்றங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று நாம் அடுத்தகட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். இன்னும் கூடுதல் வளர்ச்சியை நோக்கி செல்ல வேண்டும் என்று நினைக்கிறோம் என முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்தார்.

# பெப்ரவரியில் மத்திய அரசின் பட்ஜெட் எதிர்பார்ப்பு



நாடாளுமன்றத்தில் பெப்ரவரி 1ஆம் திகதி மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதா ராமன், 2025ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் பட்ஜெட்டை தாக்கல் செய்வார் என எதிர் பார்க்கப்படுகிறது. எனினும் அரசு தரப்பில் அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியிடப்பட வில்லை.

2025ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்கு முன்னதாக, தொழில் துறை மற்றும் பல்வேறு துறையினருடன் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஒரு மாத காலம் நடத்திய ஆலோசனையை கடந்த 6ஆம் திகதி நிறைவு செய்தார். இந்த ஆண்டு தாக்கல் செய்யும் பட்ஜெட்டில், என்னென்ன அறிவிப்புகள் வெளியாகப்போகின்றன, என்னென்ன மாற்றங்களை நிதி அமைச்சர் செய்யப்போகிறார்? என்பதை அறிய தொழில் துறையினர் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளனர்.

நிதி ஒருங்கிணைப்பு, வரி முறையை எளிமைப்படுத்தல் மற்றும் முதலீடு சார்ந்த வளர்ச்சி ஆகியவற்றில் பட்ஜெட்டில் கவனம் செலுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுச் செலவினங்களை அதிகரிப்பது, நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பது, தனியார் துறை முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் வரி சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

வரி செலுத்துவோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியிடவேண்டும் என்ற எதிர் பார்ப்பும் உள்ளது. புதிய வரி முறையில் வரிவிலக்கு வரம்பை 3 இலட்சத்திலிருந்து 5 இலட்சம் இந்திய ரூபாயாக உயர்த்தி, வரி விகிதங்களைக் குறைப்பதன் மூலம் வரி செலுத்துவோருக்கான தனிநபர் வரி நிவாரணம் வழங்குவதில் பட்ஜெட் கவனம் செலுத்த வேண்டும் என்று எர்ன்ஸ்ட் ரூ யங் இந்தியா செய்தியை மேற்கோள் காட்டி ஏஎன்ஐ செய்தி வெளியிட்டுள்ளது. இந்திய பங்குச் சந்தைகள் பொதுவாக சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் செயல்படாது. ஆனால், பெப்ரவரி 1ஆம் திகதி (சனிக் கிழமை) பட்ஜெட் அறிவிக்கப்பட்டால் பங்குச் சந்தைகள் செயல்படும் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் நேரடி வர்த்தக அமர்வு நடத்தப்படும் என பங்குச் சந்தைகள் தெரிவித்துள்ளன.

# போபால் சிறையில் சீன ட்ரோன்



மத்திய பிரதேசத்தில் உச்சகட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ள போபால் மத்திய சிறைக்குள் சீன தயாரிப்பு ட்ரோன் ஒன்று கண்டெடுக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் உள்ள மிகவும் பரபரப்பான சிறைகளில் போபால் மத்திய சிறையும் ஒன்றாகும். சிறைக் காவலர்கள் ரோந்து பணிகளில் ஈடுபட்ட வேளையிலேயே இது கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சிறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு எடுத்துச் சென்று ட்ரோன் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. அதில் சீன தயாரிப்பைச் சேர்ந்த இலகுரக ட்ரோனில் 2 லென்ஸ்கள் இருந்தன. தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு, இந்த ட்ரோன் எங்கிருந்து வந்தது என்பது குறித்து விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. போபால் மத்திய சிறையில் பலதரப்பட்ட நாடுகளிலிருந்து கைது செய்யப்பட்ட தீவிரவாத இயக்கங்களைச் சேர்ந்த பயங்கரவாதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குடியரசு தினம் நெருங்கி வரும் நிலையில், இந்த சிறையில் உச்சகட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்த சூழலில், மர்மமான முறையில் ட்ரோன் கண்டெடுக்கப்பட்டதனை பொலிஸார் எச்சரிக்கையாகவே கருதுகின்றனர்.

# கேரளாவிலிருந்து மீண்டும் தமிழகம் வந்த கழிவுகள்

## 5 வாகனங்கள் பறிமுதல், 9 பேர் கைது

கேரளாவிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இறைச்சிக் கழிவுகள், உணவுக் கழிவுகளை ஏற்றி வந்த 5 வாகனங்களினை தமிழக தனிப்படை பறிமுதல் செய்ததுடன் 9 பேரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறது.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள மண்டல புற்றுநோய் மையம் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இருந்து, ஆபத்தான மருத்துவக் கழிவுகள், திருநெல்வேலி மாவட்டம் கொடகநல்லூர், பழவூர் கிராமங்களில் உள்ள பட்டா நிலங்கள், நீர்நிலைகளில் கொட்டப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களாக இதுபோல குப்பைகள் கொட்டப்படுவதாகவும், சில நாட்களில் அதை எரித்து விடுவதாகவும், அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்ததையடுத்து தென்மண்டல பசுமை தீர்ப்பாயம் தாமாக முன்வந்து விசாரணை நடத்தியது. பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவுப் படி, கேரளா அதிகாரிகள் தமிழகத்திற்கு வந்து கழிவுகளை லொறிகளில் ஏற்றிச் சென்றனர். இதற்கிடையில், 'கேரள கழிவுகள் தமிழகத்தில் கொட்டப்படுவதை தடுக்க தனிப்படை அமைத்து, தமிழக அரசு கண்காணிக்க வேண்டும்" என உத்தரவிட்டிருந்தது.

அதன்படி தனிப்படை எல்லையில் மருத்துவ கழிவுகள் உட்பட குப்பைகள் ஏதும் கொட்டப்படுகிறதா? என்பதை கண்காணித்து வந்தநிலையில் நேற்று (09) கேரளாவிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இறைச்சிக் கழிவுகள், உணவுக் கழிவுகளை ஏற்றி வந்த 5 வாகனங்களினை தனிப்படை பறிமுதல் செய்தது. இது தொடர்பாக 9 பேரைக் கைது செய்து, தனிப்படை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சத்தீஷ்கரில் மூவர் சுட்டுக்கொலை

சத்தீஷ்கரில் நேற்று சுற்றி வளைத்து தீவிர தேடுதல் வேட்டையில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டபோது, அங்கு மறைந்திருந்த நக்சலைட்டுகளுக்கும், பாதுகாப்புப்படையினருக்கும் இடையே நேற்று காலை துப்பாக்கி சண்டை ஏற்பட்டது. இந்த மோதலில் நக்சலைட்டுகள் 3 பேர் கொல்லப்பட்டனர். சுட்டுக்கொல்லப்பட்ட 3 நக்சலைட்டுகளின் உடல்கள் மற்றும் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. உடல்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது என பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.




# சீன வெளியுறவு அமைச்சரின் ஆபிரிக்க விஜயத்தில் துப்பாக்கிச்சூடு

## 19 பேர் உயிரிழப்பு

ஆபிரிக்காவின் மத்திய நாடான சாட்டின் தலைநகர் என்ஜமனாவில் உள்ள ஜனாதிபதி வளாகத்தில் ஆயுதமேந்திய போராளிகள் நுழைந்து தாக்குதல் நடத்த முயற்சித்ததையடுத்து பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சீனாவின் வெளியுறவு அமைச்சர் வாங் யீ சாட் நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

புதன்கிழமை மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட தோல்வியுற்ற தாக்குதலில் 24 ஆயுதமேந்திய படைகளில் குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டனர் என அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்தது. மேலும் துப்பாக்கிச் சூட்டில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்தார்.

தாக்குதல் நடத்தியவர்களில் 18 பேர் உயிரிழந்ததுடன் ஆறு பேர் காயமடைந்தனர். மேலும் பாதுகாப்பு படையினரில் ஒருவர் உயிரிழந்ததுடன் மூன்று பேர் காயமடைந்ததாகவும் அவர்களில் ஒருவர் படுகாயமடைந்தார்" என சாட் வெளியுறவு அமைச்சரும் அரசாங்க செய்தித் தொடர்பாளருமான அப்டெராமன் கௌலமல்லா தெரிவித்தார். துப்பாக்கிச் சூடு நடந்த சில மணி நேரங்களுக்குப் பிறகு, கௌலமல்லா ஒரு வீடியோவில், இராணுவ வீரர்களால் சூழப்பட்டு, பெல்ட்டில் துப்பாக்கியுடன், "நிலைமை முற்றிலும் கட்டுக்குள் உள்ளது. ஸ்திரமின்மை முயற்சி குறைக்கப்பட்டது" என தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



# லொஸ் ஏஞ்சல்ஸில் காட்டுத்தீ; ஐவர் உயிரிழப்பு

லொஸ் ஏஞ்சல்ஸில் புதன்கிழமை (08) ஏற்பட்ட காட்டுத் தீயினால் குறைந்தது 5 பேர் உயிரிழந்ததுடன், நூ நூற்றுக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டன. அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தீ விபத்தினை கட்டுப்படுத்தும் முயற்சியில் தீயணைப்பு வீரர்களும், விமானப் படையினரும் போராடி வருகின்றனர். சூறாவளிக்காற்று, தீயை அணைக்கும் நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமைந்ததுடன் இதன் தாக்கம் காரணமாக செவ்வாய்க்கிழமை (07) ஆரம்பித்த தீயானது வேகமாக பரவியது.

தற்போது தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பல ஹொலிவூட் நட்சத்திரங்கள் வசிக்கும் லொஸ் ஏஞ்சல்ஸின் அழகிய புறநகர்ப் பகுதியான பசுபிக் பொலிசேட்ஸ் சுற்றுப்புறத்தில் புதன்கிழமை தீ வேகமாக பரவியது. தீப்பரவலினால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டிடங்கள் ஏற்கனவே அழிக்கப்பட்டுள்ளதாக தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி ஜோ பைடன், ஒரு பெரிய பேரழிவு அறிவிப்பிற்கு புதன்கிழமை ஒப்புதல் அளித்ததுடன் கலிபோர்னிய ஆளுநர் கவின் நியூசோம் அவசரகால நிலையை அறிவித்தார். ஏனெனில், புதன்கிழமை இரவு முழுவதும் காற்று குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் வியாழக்கிழமை வரை நிலைமை மோசமாக இருக்கும் என முன்னறிவிப்பாளர்கள் எச்சரித்தனர்.

ஒரேகான், நியூ மெக்சிகோ மற்றும் வொஷிங்டன் மாநிலத்தைச் சேர்ந்த குழுவினர் உட்பட கிட்டத்தட்ட 5,000 வீரர்கள் தீயை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், கலிபோர்னியா தீயை எதிர்த்துப் போராடுவதற்கு தீயணைப்பு வீரர்கள் மற்றும் கடற்படை ஹெலிகொப்டர் நீர் விநியோக வாளிகள் போன்றவற்றினை வழங்கி பாதுகாப்புத் துறை கூடுதல் ஒத்துழைப்பினை வழங்குவதாக பைடன் அறிவித்தார்.



# பாவனையாளர்கள் தகவல் கசிவு அப்பிள் நிறுவனம் மறுப்பு

அப்பிள் நிறுவனம், தனது குரல் மென்பொருளான ஸிரியால் (Siri) சேகரிக்கப்பட்ட தரவுகளை விற்கவோ அல்லது சந்தைப்படுத்தும் சுயவிபரங்களை உருவாக்கவோ அதனை பயன்படுத்தவோ இல்லை என மறுப்பு தெரிவித்து அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.




அப்பிள் அதன் குரல் உதவியாளர் ஸிரிக்கு (Siri) எதிரான வழக்கைத் தீர்ப்பதற்கு 95 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்துவதாக ஒப்புக்கொண்ட சில நாட்களுக்கு பின்னர் இந்த அறிக்கை வெளிவந்துள்ளது. அப்பிள் நிறுவனம் பாவனையாளர்களின் தரவைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ளதுடன் அதன் அனைத்து தயாரிப்புகளும் ஒரே அடித்தளத்தில் உருவாக்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளது.

அதில், சந்தைப்படுத்தும் சுயவிபரங்களை உருவாக்க அப்பிள் ஒருபோதும் ஸிரியின் தரவைப் பயன்படுத்தவில்லை எனவும் எந்த நோக்கத்திற்காகவும் அதை எவருக்கும் விற்பனை செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ளது. ஸிரியை (Siri) மேலும் தனிப்பட்டதாக மாற்றுவதற்கான தொழில்நுட்பங்களை நாங்கள் தொடர்ந்து உருவாக்கி வருகிறோம், தொடர்ந்து அதைச் செய்வோம் என அப்பிள் நிறுவனம் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. மொபைல்களில் ஸிரியை (Siri) தரவிறக்கம் செய்து செயற்படுத்திய பின்னர், அப்பிள் அவர்களின் தனிப்பட்ட உரையாடல்களை வழக்கமாகப் பதிவுசெய்து, இந்த உரையாடல்களை விளம்பரதாரர்கள் போன்ற மூன்றாம் தரப்பினருக்கு வெளிப்படுத்தியதாக அண்மைய வழக்கு கடந்த வாரம் வெளிவந்தமையும் குறிப்படத்தக்கது.




# ஒரே நேர்கோட்டில் நான்கு கிரகங்கள் அரிய வானியல் நிகழ்வு

இந்த புதிய ஆண்டில் பூமிக்கு இணையாக ஒரே நேர்கோட்டில் நான்கு கிரகங்கள் தென்படும் அரிய வானியல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

சூரிய குடும்பத்தில் பூமியை போலவே மேலும் பல கோள்களும், சிறுக்கோள்களும், விண்மீன்களும் சூரியனை ஒரு குறிப்பிட்ட பாதையில் சுற்றி வருகின்றன. ஒவ்வொரு கிரகமும் பூமியை விட நீளமான அல்லது குறைவான சுற்றுப்பாதையில் சூரியனை சுற்றி வருகையில் மிக அரிதாக அவ்வப்போது சில கோள்கள் ஒரே நேர்கோட்டில் சந்தித்துக் கொள்வதுண்டு.

அதன்படி, இந்த ஆண்டில் வெள்ளி, சனி, வியாழன், செவ்வாய் ஆகிய நான்கு கிரகங்களும் பூமியின் நேர்கோட்டில் ஒன்றாக தென்படும் வானியல் அதிசயம் நிகழவுள்ளது. இந்த வானியல் நிகழ்வு வரும் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அதிகாலை நேரத்தில் இந்த கிரக அணிவகுப்பை காணமுடியும் என்பதோடு தொலைநோக்கிகள் துணை கொண்டு இவ் வானியல் நிகழ்வினை தெளிவாக காணலாம் என வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஏமனில் அமெரிக்கா வான்வழி தாக்குதல்

ஏமனில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா அதிரடி வான்வழி தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல், காசாமுனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழு இடையே ஓராண்டுக்குமேல் போர் நீடித்து வருகிறது. இந்த போரில் 45,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, ஹமாஸ் ஆயுதக்குழு வசம் உள்ள 100 இற்கும் மேற்பட்ட பணய கைதிகளை மீட்க இஸ்ரேல் முயற்சித்து வருகிறது. பணய கைதிகளை மீட்கவும், போரை நிறுத்தவும் இரு தரப்பும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதனிடையே, இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயற்பட்டு வரும் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளும் ஆதரவு அளித்து வருகின்றனர்.

ஹமாஸிற்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அரபிக்கடல்,



செங்கடலில் செல்லும் சரக்குக் கப்பல்களை குறிவைத்து ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும், இஸ்ரேல் மீதும் அவ்வப்போது ஏவுகணை, ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அதேபோல், செங்கடல் பகுதியில் பாதுகாப்பு மற்றும் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அமெரிக்க ட்ரோன்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல், அமெரிக்கா அவ்வப்போது தக்க பதிலடி கொடுத்து வருகிறது. இந்நிலையில், ஏமனில் அமெரிக்கா புதன்கிழமை வான்வழி தாக்குதல் நடத்தியது. ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து ஏமன் தலைநகர் சனா, அம்ரன் மாகாணத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்பு குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

# இந்தியா, சீனா மக்கள் தொகை வீழ்ச்சி எலொன் மஸ்க் கவலை

இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளில் குழந்தை பிறப்பு விகிதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியால் மக்கள் தொகை குறைந்து வருவது குறித்து எலான் மஸ்க் கவலை தெரிவித்துள்ளார்.



இந்தியாவின் மக்கள் தொகை 142.86 கோடி ஆகவும் சீனாவின் மக்கள் தொகை 141.07 கோடியாகவும் காணப்படுகிறது. நாட்டின் சராசரி மக்கள் தொகை வளர்ச்சி 0.92 சதவீதமாக உள்ளது. இதன் காரணமாக இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளில் குழந்தை பிறப்பு விகிதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியால் மக்கள் தொகை குறைந்து வருவது குறித்து எலொன் மஸ்க் கவலை தெரிவித்துள்ளார். டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ், எக்ஸ் உள்ளிட்டவற்றின் நிறுவனரும் உலகப் பணக்காரருமான எலொன் மஸ்க் மக்கள் தொகை வீழ்ச்சி மனிதகுலத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் என தெரிவித்துள்ளார். இந்தியாவின் மக்கள் தொகை 2100ஆம் ஆண்டிற்குள் 110 கோடிக்கும் கீழ் குறையும் எனவும் சீனாவின் மக்கள் தொகை 73 கோடிக்கு வரும் எனவும் சுட்டிக்காட்டும் 2020 வரைபடம் ஒன்றினைப் பகிர்ந்து மஸ்க் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

2023 புள்ளிவிவரப்படி இந்தியாவின் மக்கள் தொகை 142.86 கோடி ஆகவும் சீனாவின் மக்கள் தொகை 141.07 கோடியாகவும் காணப்படுகின்றது. சமீபத்தில் வெளியான ஐ.நா. சபை மற்றும் உலக வங்கி, இந்திய சுகாதாரத்துறை ஆகியவற்றின் புள்ளிவிவரப்படி, இந்தியாவின் சராசரி மக்கள் தொகை வளர்ச்சி 0.92 சதவீதமாக உள்ளது. வருங்காலங்களில் இந்த வளர்ச்சி விகிதம் மேலும் குறையும் என அஞ்சப்படுகிறது. குறிப்பாக இந்தியாவில் மக்கள் தொகை வளர்ச்சியில் பின்தங்கியுள்ள தமிழகத்தில் 0.30 சதவீதம் மட்டுமே மக்கள் தொகை வளர்ச்சி இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

# ஈரான் சிறையிருந்து விடுதலையான இத்தாலி பத்திரிகையாளர்

இஸ்லாமிய சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இத்தாலி பத்திரிகையாளரான சிசிலியா சாலா விடுதலையாகி நாடு திரும்பியுள்ளார்.

இத்தாலியைச் சேர்ந்த சிசிலியா சாலா ஈரான் நாட்டிற்குச் சென்றார். பத்திரிகையாளர் விசா மூலம் ஈரான் சென்ற அவரை 3 நாட்களுக்குப் பிறகு இஸ்லாமிய சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் பேரில் ஈரான் அரசு கடந்த மாதம் 19ஆம் திகதி கைது செய்தது. கிட்டத்தட்ட 3 வாரங்கள் அவர் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். அவரை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளில் இத்தாலிய அரசு ஈடுபட்டது. இந்நிலையில், இத்தாலி பத்திரிகையாளரான சிசிலியா சாலா ஈரான் சிறையில் இருந்து விடுதலையாகி விமானம் மூலம் உரோமின் சியாம்பினோ விமான நிலையத்தில் தரையிறங்கினார். அங்கு அவரை இத்தாலி பிரதமர் ஜோர்ஜியா மெலோனி உட்பட குடும்ப உறுப்பினர்கள் பலர் வரவேற்றனர். இத்தாலி அரசின் இராஜதந்திர முயற்சிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர்களும் பாராட்டு தெரிவித்தனர்.










# இலங்கைக்கெதிரான போட்டிகள்; அவுஸ்திரேலிய அணி அறிவிப்பு

இலங்கை -அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஸ்டீவ் ஸ்மித் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த டெஸ்ட் தொடர் இலங்கையில் 29-ஆம் திகதி நடைபெறவுள்ளது. 16 பேர் கொண்ட அணியின் கெப்டனாக ஸ்டீவ் ஸ்மித்தும் துணை கெப்டனாக டிராவிஸ் ஹெட்டும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவுக்கு எதிரான போடர் கவாஸ்கர் தொடரில் காயம் காரணமாக வெளியேறிய ஹசில்வுட், குணமடையாததால் இந்த தொடரில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. வேகப்பந்து வீச்சாளரான ஸ்டார்க்-க்கு ஓய்வு வழங்கப்படவில்லை.

அவுஸ்திரேலிய அணி

ஸ்டீவ் ஸ்மித், உஸ்மான் கவாஜா, சாம் கான்ஸ்டாஸ், மார்னஸ் லாபுசாக்னே, டிராவிஸ் ஹெட், அலெக்ஸ் கேரி, ஜோஷ் இங்கிலிஸ், நாதன் மெக்ஸ்வீனி, பியூ வெப்ஸ்டர், நாதன் லியோன், மிட்செல் ஸ்டார்க், கூப்பர் கோனோலி, டாட் மர்பி, மாட் குஹ்னேமன், சீன் அபோட், ஸ்காட் போலண்ட்.

Steve Smith, Usmant Khawaja, Sam Konstas, Marnus Labuschagne, Travis Head, Alex Carey, Josh Inglis, Nathan McSweeney, Beau Webster, Nathan Lyon, Mitchell Starc, Cooper Connolly, Todd Murphy, Matt Kuhneman, Sean Abbott, Scott Boland

# லிவர்பூல் உதைப்பந்தாட்ட கிளப்பை வாங்கும் எலான் மஸ்க்?



லிவர்பூல் உதைப்பந்தாட்ட கிளப் அணியை எலான் மஸ்க் வாங்க விருப்பம் தெரிவித்துள்ளதாக அவரது தந்தை கூறியுள்ளார். எலான் மஸ்கின் தந்தை எர்ரோல் மஸ்க் மேலும் கூறியதாவது: நான் இது குறித்து கருத்து தெரிவிக்க முடியாது. அவர்கள் விலையை ஏற்றிவிடுவார்கள். லிவர்பூல் அணியை வாங்குவாரென்றால் அவருக்கு விருப்பம் இருக்கிறது. ஆனால், அதற்காக அவர் வாங்கிவிடுவார் என்று சொல்லமுடியாது. வாய்ப்பு அதிகம் உள்ளது என்றார். தற்போது, லிவர்பூல் அணியை எஃப்எஸ்ஜி (ஃபென்வே ஸ்போர்ட்ஸ் குரூப்) வசமிருக்கிறது. அந்த அணியை விற்கும் எண்ணம் இல்லை ஆனால் வெளியிலிருந்து யாரவது முதலீடு செய்தால் அதற்கு சம்மதம் என தெரிவித்துள்ளது.

போர்ப்ஸ் இதழில் லிவர்பூல் அணியின் மதிப்பு 4.3 பில்லியன் டொலராக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அணியின் நட்சத்திர வீரர் முகமது சாலா வேறு அணிக்கு மாற்றப்படலாம் என சமீபத்திய தகவல் வெளியாகிய நிலையில் எலான் மஸ்க் வாங்கினால் அவர் இதே அணியில் தொடர்ந்து விளையாடலாமென தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய ஸ்குவாஷ் போட்டிகள்





இலங்கை ஸ்குவாஷ் சம்மேளனம் 44வது தடவையாக நடத்திய தேசிய ஸ்குவாஷ் போட்டி இரத்மலானை இலங்கை விமானப்படை ஸ்குவாஷ் வளாகத்தில் ஜனவரி 04 ஆம் திகதி முதல் 07 ஆம் திகதி வரை நடைபெற்றது. புதிய ஆண்கள் மற்றும் பெண்கள், 35 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட வல்லுநர்கள், 55 வயதுக்கு மேற்பட்ட நிபுணர்கள், ஆண்கள் கேடயம் போட்டி, பெண்கள் மற்றும் ஆண்கள் ஓபன் ஆகிய பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடத்தப்பட்டன. இந்த போட்டிகளில் உள்ளூர் விளையாட்டு வீரர்கள் பலர் கலந்து கொண்டனர். ரவிந்து லக்சிறி மற்றும் ஷமில் வக்கீல் ஆகியோர் ஆடவர் திறந்த ஆண்கள் மற்றும் திறந்த பெண்கள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றனர். இறுதிப் போட்டியில் ரவிந்து லக்சிறி 03க்கு 0 என்ற புள்ளிக்கணக்கில் தொடர்ந்து 12ஆவது தடவையாகவும், மகளிர் பிரிவில் சனித்மா சினலி 03க்கு 1 என்ற புள்ளிக்கணக்கிலும் சம்பியன் பட்டத்தை வென்றனர். தேசிய ஸ்குவாஷ் தெரிவுக்குழு உறுப்பினர் விங் கமாண்டர் நளின் ஜயதிலக மற்றும் YETI நிறுவனத்தின் பணிப்பாளர் திஷான் பாலசூரிய, தேசிய ஸ்குவாஷ் சம்மேளனத்தின் தலைவர் தம்மிக்க விஜேசுந்தர, இலங்கை ஸ்குவாஷ் சம்மேளனத்தின் துணைத் தலைவர் மற்றும் போட்டி ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் குரூப் கெப்டன் எரந்த கிகனகே ஆகியோரும் பங்குபற்றினர்.

# ஆப்கானிஸ்தானின் பயிற்சி ஆலோசகராக யூனிஸ் கான்



பாகிஸ்தான் அணியின் முன்னாள் கெப்டன் யூனிஸ் கான், ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சி ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தானில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டிக்காக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அறிக்கையை வெளியிட்ட ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை, சம்பியன்ஸ் கிண்ண போட்டிக்கு முன்னர் பாகிஸ்தானில் நடைபெறும் பயிற்சி முகாமில் இருந்து யூனிஸ் கான் தனது அணியுடன் இணைவார் என்று தெரிவித்துள்ளது. யூனிஸ் கான் 2022 ஆம் ஆண்டு அபுதாபியில் ஆப்கானிஸ்தான் அணிக்காக 15 பேர் கொண்ட பயிற்சி முகாமை நடத்தினார். இந்த ஆண்டுக்கான சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் பெப்ரவரி 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# விடைபெறும் மார்ட்டின் குப்டில்



நியூசிலாந்து அணியின் சிரேஷ்ட துடுப்பாட்ட வீரர் மார்ட்டின் குப்டில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

38 வயதான குப்டில், உலகம் முழுவதும் உள்ள ரி20 லீக் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவார்.

தற்போது நியூசிலாந்தின் உள்நாட்டு ரி20 போட்டியான சூப்பர் ஸ்மாஷில் ஆக்லாந்துக்காக விளையாடி வருகிறார்.

2009 ஆம் ஆண்டு தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்த அவர், கடந்த இரண்டு ஆண்டுகளாக நியூசிலாந்து அணியில் விளையாடவில்லை. நியூசிலாந்துக்காக ரி20-ஒரு நாள்-டெஸ்ட் என்று அனைத்து போட்டிகளிலும் விளையாடியுள்ளார். மார்ட்டின் குப்டில் 2009 ஆம் ஆண்டு நியூசிலாந்திற்காக ஒருநாள் போட்டியில் அறிமுகமானார். முதல் போட்டியிலே சதம் அடித்தார். 2015 ஒருநாள் உலகக் கிண்ணத்தில் இரட்டை சதம் அடித்தார். 47 டெஸ்டில் 2586 ஓட்டங்களும், 198 ஒருநாள் போட்டிகளில் 7346 ஓட்டங்களும், 122 ரி20 சர்வதேசப் போட்டிகளில் 3531 ஓட்டங்களும் எடுத்துள்ளார். அனைத்து போட்டிகளிலும் மொத்தம் 23 சதங்கள் அடித்துள்ளார்.

## சம்பியன்ஸ் கிண்ணம்

# அவுஸ்திரேலிய கெப்டன் விளையாடுவது சந்தேகம்



அவுஸ்திரேலிய கெப்டன் பாட கம்மின்ஸ"க்கு காயம் ஏற்பட்டுள்ளதால் சம்பியன்ஸ் கிண்ண தொடரில் பங்கேற்பதில் சந்தேகம் உள்ளதாக தேர்வுக்குழுத் தலைவர் ஜோர்ஜ் பெய்லி தெரிவித்துள்ளார்.

போர்டர் - கவாஸ்கர் தொடர் முழுவதும் கணுக்கால் காயத்தோடு விளையாடினார். தற்போது, கணுக்கால் காயத்திற்காக ஸ்கேன் எடுக்கச் சென்றுள்ளதாக ஆவுஸ்திரேலியா தேர்வுக்குழுத் தலைவர் ஜோர்ஜ் பெய்லி தெரிவித்துள்ளார். பெப்ரவரி.19ஆம் திகதி சம்பியன்ஸ் கிண்ணம் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் கெப்டன் கம்மின்ஸ் நிலைமை சந்தேகமாகவுள்ளது.

இது குறித்து ஜோர்ஜ் பெய்லி கூறியதாவது: இலங்கை தொடரில் விளையாடாமல் பாட் கம்மின்ஸ் சிறுது காலம் ஓய்வு எடுப்பார். சிறியதாகக் கணுக்கால் காயம் இருந்து வருகிறது. கம்மின்ஸின் ஸ்கேன் முடிவுகள் வந்தால்தான் நிச்சயமாக எதையும் கூற முடியும் என்றார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 10ம் திகதி வெள்ளிக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.